# கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

## வருடாந்த அறிக்கை
## 2011

## பொருளடக்கம்


| | |
|---|---|
| பணிப்பாளர் சபையும் நிறைவேற்று உத்தியோகத்தர்களும் | 01 |
| தலைவரின் மீளாய்வு | 02 – 03 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 04 – 05 |
| ஆண்டுக்கான செயற்பாடுகள் | 06 |
| நிதிக்கூற்றுக்கள் | 07 – 11 |
| நிதிக்கூற்றுக்களின் மீதான குறிப்புக்கள் | 12 – 43 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 44 – 64 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியிள் அறிக்கை மீதான தலைவரின் கருத்துரைகள் | 65 – 76 |

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

2011 ஆம் ஆண்டுக்கான பணிப்பாளர் சபை

01. தலைவர் - திரு.எராஜ் ரி.பெர்ணான்டோ

02. தொழிற்படு பணிப்பாளர் - திரு.கே.எம்.எம். ஷாகிர்

பணிப்பாளர்கள் :

03. திரு.கே.எம்.எம்.ஜயதிலக
பணிப்பாளர் – (திறைசேரி பிரதிநிதி)
மேலதிக பணிப்பாளர் நாயகம்
முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம்
பொதுத் திறைசேரி

04. திரு.பீ.தர்மதாச,
பணிப்பாளர் – (அமைச்சுப் பிரதிநிதி)
மேலதிக செயலாளர்
கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு
(2011.11.09 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் இராஜினாமாச் செய்துள்ளார்)

05. திரு.எம்.ஜீ.எஸ்.எம். மொஹமட் ஜவாட்

06. திரு.டீ.ஏ. புல்ஜான்ஸ்.

07. திரு.டீ.சி..எல்.லங்காதிலக.

08. திரு.எம்எம்.பீ.கே. மாயதுன்ன
பணிப்பாளர் (அமைச்சுப் பிரதிநிதி)
மேலதிக செயலாளர், (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)
கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு
(அமைச்சின் கடிதத்தின்படி 2011.11.23 இருந்து)

## வருடாந்த அறிக்கை - 2011

### தலைவரின் வாழ்த்துச் செய்தி

நான் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் தலைவராக கௌரவ. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் அவர்களினால் 2015, ஆகஸ்ட் 15 இலிருந்து பயனுறுதியாகும் வகையில், நியமிக்கப்பட்டேன். அன்றிலிருந்து நான் இந்த நிறுவனத்தின் ஒவ்வொரு துறை பற்றியும் விரிவாக ஆய்வு செய்துள்ளதுடன் நிறுவனத்தின் குறைபாடுகள் மற்றும் கணக்கீட்டு விடயங்கள் மற்றும் வியாபாரச் செயற்பாடுகளினை அங்கீகரிப்பதிலுள்ள இடர்பாடுகளை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளினையும் எடுத்துள்ளேன்.

அதற்கிணங்க, நான் நெல் சந்தைப்படுத்தல் சபையுடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களினைப் பதிவு செய்வதில் காணப்படுகின்ற கணக்கீட்டுக் குறைபாடுகளினை இனங்காணும் நோக்குடன் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பினை துரிதப்படுத்துவதற்கும், அரிசிப் பதனிடல் செயற்பாடுகளில் ஈடுபட்ட அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்து வருமதியாகவுள்ளவற்றினை மீள அறவீடு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகளினை எடுத்துள்ளேன். மேலும், நிறுவனத்தின் பிரதான வருமானம் ஈட்டும் மூலமாகிய நிறுவனத்திற்குச் சொந்தமான ஆதனங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் பெறப்படும் வாடகை வருமானத்தினை அதிகரிக்கும் நோக்குடன் புதிய உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளினை புதுப்பிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டிலிருந்து தொழிற்பாடற்ற நிலையில் காணப்படும் பண்ணேகமுவ மற்றும் ஹிங்குராக்கொட அரிசி பதனிடும் நிலையங்களின் தொழிற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுளதுடன் தற்போதைய வியாபாரச் செயற்பாடுகளினை மேலும் வலுவூட்டும் நோக்குடன் லங்கா சதொச போன்ற நிறுவனங்களுடன் இணைந்து தேவையான பின்னணி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எமது நிறுவனத்தினூடாக அரிசி உள்ளடங்கலான சில அத்தியாவசிய உணவுப் பொருட்களினையும் வழங்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் கொள்வனவு செய்யப்பட்ட லொறிகள் லங்கா சதொசவின் போக்குவரத்து தேவைப்பாடுகளிற்காக அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இவற்றின் மூலமான வருமானத்தினை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

எமது நிறுவனத்தினால் எதிர்நோக்கப்பட்டுவரும் நிதி நெருக்கடிகளிலிருந்து விடுபடுவதற்கும் நாம் எதிர்பார்ப்பதுடன் சதொசவினை புத்துயிரளித்து மேபடுத்தப்பட்ட நிறுவனமாக முன்னேற்றுவதன் மூலம் அதன் மனித மற்றும் பௌதீக மூலவளங்களிலிருந்து அதிஉச்ச பயன்பாட்டினைப் பெறுவதனூடாக அரச துறை தொழில்முயற்சிகளில் வினைத்திறன் வாய்ந்த பொருளாதார நடைமுறைகளினைக் பின்பற்றுகின்ற நிறுவனம் என்ற நிலைக்கு சதொசவினை மாற்றியமைப்பதற்கும் எதிர்பார்க்கின்றோம்.

அதிமேதகு ஜனாதிபதி மற்றும் மாண்புமிகு பிரதம மந்திரி அவர்களின் கொள்கைக்கிணங்க, மேற்குறித்த நோக்கங்களினை அடைவதற்கான வழிகாட்டுதல்களினையும் பங்களிகளிப்பினையும் நல்கிய கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ. ரிசாட் பதியுதீன் அவர்களுக்கும் எனது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், கௌரவ. பிரதி அமைச்சர் அவர்கட்கும், அமைச்சின் செயலாளருக்கும் மற்றும் அமைச்சின் ஏனைய அனைத்து பதவியினருக்கும் திறைசேரிக்கும் எனது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிறுவனத்தினை திறம்பட நாத்துவதற்கும் வலுவூட்டுவதற்கும் தேவையான சக்தியினையும் ஒத்துழைப்பினையும் மற்றும் ஊக்குவிப்பினையும் வழங்கிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் அனைத்துப் பிரிவுகளின் சிரேஷ்ட நிறைவேற்றுதர உத்தியோகத்தர்கள் மற்றும் பதவியினருக்கும் இவ்விடத்தில் எனது நன்றியறிதல்களினைப் பதிவு செய்து கொள்கின்றேன்.

எம்.றிஸ்வான் ஹமீம்
தலைவர்
2016.01.04.

## 2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் பணிப்பாளர் சபை அறிக்கை

## 2011 டிசம்பர் 31

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் பணிப்பாளர் சபையானது, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 ஆம் பிரிவுகளின்படி 2011.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் வருடாந்த அறிக்கையினை இத்தால் சமர்ப்பிக்கின்றது.

### 01. பொது :-

**முதன்மை நடவடிக்கைகள்**

1949 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவு மொத்த விற்பனை தாபனமானது (கூமொதா என அழைக்கப்படும்) அதன் வியாபாரத்தினை 1950 ஜூலை 01 ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்தது.

ஆரம்பத்தில், கூமொதா இன் முதன்மை நோக்கமானது, அத்தியாவசிய உணவுப் பொருட்களினை தட்டுப்பின்றி வழங்குவதாகவே அமைந்திருந்தது.

எவ்வாறாயினும், 50 ஆண்டுகளுக்கு மேலாக பாவனையாளர் நலன்புரி மற்றும் விவசாய சமூகத்திற்காக வியாபார நடவடிக்கைகளினை முன்னெடுத்தபோது பாரிய நிதி நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்தமையால் லங்கா சதொச நிறுவனத்திற்கு வசதியளிக்கும் நோக்குடன் 2004 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் சுய இழைப்பாறல் திட்டமொன்றினை கொண்டு வந்தது.

### 02. வியாபார நடவடிக்கைகளின் மீளாய்வு

நிறுவனத்தின் தற்போதைய நிலையானது, பணிப்பாளர் சபை தலைவரின் மேற்பார்வையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, நிறுவனத்தின் பிரதான வருமானம் ஈட்டும் முறையான தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு சொத்துக்களினை குத்தகைக்கு வழங்கும் செயற்பாட்டினை மேலும் மேம்படுத்துவதற்கும், போக்குவரத்துப் பிரிவினை மேம்படுத்துவதற்கும், லங்கா சதொசவிற்கு நியாயமானதும் வினைத்திறன் வாய்ந்ததுமான சேவையினை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், லங்கா சதொச வலையமைப்பினூடாக பவனையாளர்களுக்கு தரமான அரிசியினை விநியோகிப்பதற்காக பண்ணேகமுவ, ஹிங்குராகொட அரிசி பதனிடும் நிலையங்களினை தொழிற்பாடுகளினை மீள ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது அரிசிக்கான சந்தை விலையினை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தினை வழங்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**2011.12.31 இலுள்ளவாறான கூமொதா இன் பதவியணி**

1. நிறைவேற்றுத் தரம் - 07
2. லிகிதர் மற்றும் அதற்குச் சமாந்தரமான தரங்கள் - 54
3. எனைய உதவியாளர் தரங்கள் - 234

03. 31.12.2011 இலுள்ளவாறு நிறுவனத்திற்கெதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலைபரங்கள்

| | 01.01.2011 இலுள்ளவாறான வழக்குகள் | 2011 இல் நிறைவு செய்யப்பட்ட வழக்குகள் | ட்ரயலிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 15 | 04 | 11 |
| மாவட்ட நீதிமன்றங்கள் | 13 | 03 | 10 |
| நீதவான் நீதிமன்றங்கள் | 18 | 06 | 12 |
| தொழில் நியாயசபைகள் | 14 | 05 | 09 |
| தொழில் நுண்ணாய்வுகள் | 10 | 02 | 08 |
| நடுவத்தீர்ப்பு வழக்குகள் | 02 | 02 | 01 |
| நிறைவு பெறாத வழக்குகள் (எதிர்காலத்தில் பயன் படுத்தப்படும் வழக்குகள்) | 14 | 01 | 14 |
| மேன்முறையீடுகள் | 01 | - | 01 |

## 04. தொடர்ச்சியாகப் பேணும் எண்ணக்கரு

நிறுவனமானது ரூபா.8885 மில்லியன் திரண்ட நட்டத்தினையும் ரூபா.864 மில்லியன் தொழிற்படு மூலதன பற்றாக்குறையினையும் கொண்டிருந்தமையினால் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிகளினைப் பெற்று கடன் சுமையினை நிவர்த்தி செய்வதற்கான ஆற்றலினைக் கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், கூமொதா இனால் பயன்படுத்தப்படாமல் இருக்கும் சொத்துக்களை வாடகைக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போதைய குழுவுக்குத் தேவையான நிதியானது இதன் மூலம் பெறப்பட்டது. இந்த நிறுவனமானது நிரந்தரமாக ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு தனது வியாபார நடவடிக்கைகளினை மேற்கொள்ளவுள்ளதால் பணிப்பாளர் சபையானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் நிறுவனத்தின் நிதி கூற்றுக்களினை பொருத்தமான முறையில் தயாரிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. இது நிதிக்கூற்றுக்களில் கையொப்பமிட்ட திகதியிலிருந்து குறைந்தது 12 மாதங்களாவது தொடர்ச்சியாக நடாத்தப்படுல் வேண்டும்.

## 05. கணக்காய்வாளர்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 (i) இன் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் நியதிகளின்படி, நிறுவனத்தின் கணக்காய்வாளராக கணக்காய்வார் தலைமை அதிபதி இருப்பார்.

## 06. நன்றி நவிலல்

அதிமேதகு ஜனாதிபதி அவர்கட்கும், மாண்புமிகு பிரதம மந்திரி அவர்கட்கும் கௌரவ. கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் அவர்கட்கும் எமது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்வதுடன் மீளாய்வு காலப்பகுதியில் எமக்கு தமது உதவுகையினை வழங்கிய நிதி அமைச்சு, பொதுத் திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களின் பதவியினருக்கும் எமது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பிரதான சொத்து எமது பதவினரேயாவர். மீளாய்வு காலப்பகுதியில் தமது சேவைகள் மற்றும் பங்களிப்பினை வழங்கியமைக்காக எமது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர் சபையானது தொடர்ச்சியான பங்களிப்பினை வழங்கி வருகின்ற நுகர்வோர் சமூகத்திற்கு தனது நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்வதுடன் பல்வேறு நியதிச் சட்ட நிறுவனங்கள், தனியார் அமைப்புக்கள் மற்றும் எமது வங்கிகளுக்கும் தனது நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்
## வருமானக் கூற்று

**டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

**(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாய்களில்)**

| | குறிப்பு | 2011 | 2010 |
|---|---|---|---|
| வருமானம் | 2 | 313,800,611 | 182,821,640 |
| கழி: விற்பனைச் செலவு | 3 | 261,061,999 | 180,827,758 |
| மொத்த இலாபம் / நட்டம் | | 52,738,612 | 1,993,882 |
| ஏனைய வருமானம் | 4 | 183,633,557 | 186,625,740 |
| | | 236,372,169 | 188,619,622 |
| நிருவாகமும் தாபனமும் | 5 | 165,586,679 | 78,857,485 |
| விற்பனையும் விநியோகமும் | 6 | 38,067,612 | 86,462,024 |
| | | 203,654,291 | 165,319,509 |
| **தொழிற்பாடுகளிலிருந்தான இலாபம் / நட்டம்** | | 32,717,878 | 23,300,113 |
| கழி: நிதிச் செலவு | 7 | 22,510,995 | 21,000,000 |
| **திறைசேரி முறி வட்டி சீராக்கப்பட முன்னரான இலாபம் / (நட்டம்)** | | 10,206,883 | 2,300,113 |
| கழி: திறைசேரி முறி வட்டி | | 323,812,668 | 323,812,668 |
| **வரி விதிப்பனவுக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | | (313,605,785) | (321,512,555) |
| கழி: வரி விதிப்பனவுக்கான ஏற்பாடு | | - | - |
| **வரி விதிப்பனவின் பின்னர் ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்)** | | (313,605,785) | (321,512,555) |

## கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்
## ஐந்தொகை
டிசெம்பர் 31 இலுள்ளவாறு
(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாய்களில்)

| | குறிப்பு | 2011 | 2010 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 09 | 1,133,266,809 | 1,110.517,321 |
| முதலீடு | 10 | 181,852,410 | 181,852,410 |
| **மொத்தம்** | | **1,315,119,219** | **1,292,369,731** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்பு | 11 | 137,862,900 | 110,518,118 |
| முற்பணக் கொடுப்பனவுகளும் பொறுப்புக்களும் | 12 | 31,738,018 | - |
| குறுகிய கால கடனும் ஏனைய பெறத்தக்கவைகளும் | 13 | 229,248,540 | 251,112,319 |
| வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் | 14 | 489,033,342 | 188,940,497 |
| தொடர்புடைய தரப்பு கொடுக்கல் வாங்கல் | 15 | - | 3,997,509 |
| வங்கியில் காசு | 16 | 175,491,153 | 55,269,626 |
| கையில் மற்றும் வங்கியிலுள்ள காசு | 17 | 28,927,667 | 6,088,252 |
| **மொத்தம்** | | **1,092,301,620** | **615,926,321** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **2,407,420,838** | **1,908,296,052** |
| **உரிமையும் பொறுப்புக்களும்** | | | |
| **விலை கூறப்பட்ட மூலதனம்** | | | |
| விலை கூறப்பட்ட மூலதனம் | | 1,056,590 | 1,056,590 |
| ஒதுக்கீடுகள் | 18 | 1,700,815,901 | 1,700,815,901 |
| மறுசீரமைப்பு ஒதுக்கீடு | 19 | 2,323,728,130 | 2,323,728,130 |
| நிறுத்தி வைத்த சம்பாத்தியங்கள் | | (10,541,319,225) | (10,195,851,709) |
| **மொத்தம்** | | **(6,515,718,604)** | **(6,170,251,088)** |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| முறி வட்டிக்கான திறைசேரி மானியம் | 20 | 2,482,355,130 | 2,158,542,462 |
| முறி பொறுப்பு | 21 | 4,597,000,000 | 4,597,000,000 |
| தொடர்புடைய தரப்பு கொடுக்கல் வாங்கல் | 15 | 161,559,988 | - |
| இளைப்பாறல் நன்மை கடப்பாடுகள் | 22 | 30,112,068 | 26,193,505 |
| குத்தகை கடன் கொடுத்தோர் | 23 | 17,813,530 | - |
| | | **7,288,840,716** | **6,781,735,967** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார கடன்கொடுத்தோர்கள், ஏனைய செலுத்தத்தக்கவைகள் | 24 | 1,196,678,438 | 1,036,094,000 |
| கூட்டுறவு ஆணையாளருக்கு செலுத்தத்தக்க கடன் | 25 | 220,078,867 | 50,000,000 |
| வங்கிக் கடன்கள் | 26 | 183,131,255 | 209,231,254 |
| வங்கி மேலதிகப்பற்று | 27 | 34,410,165 | 1,485,919 |
| **மொத்தம்** | | **1,634,298,725** | **1,296,811,173** |
| **மொத்த உரிமையும் பொறுப்புக்களும்** | | **2,407,420,838** | **1,908.296,052** |

கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புக்களும் இத்தகைய நிதிக் கூற்றுக்களின் முக்கியமான பகுதியாகும்.

............................ ..............................

**தலைவர்** **நிதிப் பிரிவுத் தலைவர்**

## கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

## உரிமை மாற்றக் கூற்று

## 2011 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

**(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாய்களில்)**

| விபரணம் | விலை கூறப்பட்ட மூலதனம் | மூலதன ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | கடன் கரைப்பு நிதியம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் | மீள் மதிப்பீட்டு மிகை | மறுசீரமைப்பு ஒதுக்கம் | திரண்ட இலாபம் (நட்டம்) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2010.01.01 இலுள்ளவாறான சீராக்கப்பட்ட மீதி | 1,056,590 | 32,444,879 | 94,477,411 | 300,289,603 | 72,218,000 | 1,201,386,008 | 3,616,293,377 | (8,885,159,279) | (3,566,993,411) |
| திறைசேரி முறிக்கான சீராக்கலுக்கு முந்திய ஆண்டு | | | | | | | | (607,767,284) | (607,767,284) |
| **2010.01.01 இலுள்ளவாறான மீதி (குறிப்பு அ)** | **1,056,590** | **32,444,879** | **94,477,411** | **300,289,603** | **72,218,000** | **1,201,386,008** | **3,616,293,377** | **(9,492,926,563)** | **(4,174,760,695)** |
| முன்னைய ஆண்டு சீராக்கல் - விலக்களிப்பு பெற்ற விடயம் | - | - | - | - | - | - | - | (381,412,591) | (381,412,591) |
| 2010 ஆம் ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்) | - | - | - | - | - | - | - | (321,512,555) | (321,512,555) |
| மாற்றல்கள் | - | - | - | - | - | - | 704,070,881 | - | 704,070,881 |
| திறைசேரிப் பொறுப்புக்கு மாற்றுதல் | | | | | | | (1,996,636,128) | - | (1,996,636,128) |
| **2011.01.01 இலுள்ள மீதி** | **1,056,590** | **32,444,879** | **94,477,411** | **300,289,603** | **72,218,000** | **1,201,386,008** | **2,323,728,130** | **(10,195,851,709)** | **(6,170,251,088)** |
| முன்னைய ஆண்டு சீராக்கல் | - | - | - | - | - | - | - | (31,861,731) | (31,861,731) |
| மாற்றல்கள் | - | - | - | - | - | - | - | - | - |
| 2011 ஆம் ஆண்டுக்கான இலாபம் | - | - | - | - | - | - | - | (313,605,785) | (313,605,785) |
| **2011.12.31 இலுள்ளவாறான மீதி** | **1,056,590** | **32,444,879** | **94,477,411** | **300,289,603** | **72,218,000** | **1,201,386,008** | **2,323,728,130** | **(10,541,319,225)** | **(6,515,718,604)** |

1) இறையில் ஆதனம் மற்றும் கட்டிடங்கள் என்பன 1997 டிசெம்பர் 31 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் திறந்த சந்தைப் பெறுமதியில் மீள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன், பெறுமதி மதிப்பீடானது சுயாதீனமாக மேற்கொள்ளப்பட்டதுடன், பெறுமதி மதிப்பீடானது சுயாதீன பெறுமதி மதிப்பீட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்டது. மிகையான ரூபா 1,159,246,538 /- மீள் மதிப்பீட்டு மிகைக் கணக்கிற்கு மாற்றப்பட்டது.

2) மோட்டார் வாகனங்கள் முறையே 2009.12.31 மற்றும் 2010.12.31 இலிருந்து பயனுறுதியாகும் வகையில் திறந்த சந்தைப் பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டது. பெறுமதி மதிப்பீடானது சுயாதீன பெறுமதி மதிப்பீட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்டதுடன், மிகையான ரூபா 6,192,470/- மீள் மதிப்பீட்டு மிகைக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

## கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்
## 2011 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது
**(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாய்களில்)**

**குறிப்பு "அ" - திறைசேரி முறிக்கான முந்திய ஆண்டு சீராக்கல்**

| விபரணம் | ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்) | திரண்ட நட்டம் |
|---|---|---|
| **2002.12.31 இலுள்ளவாறான மீதி** | | **(5,694,706,392)** |
| 2003.01.01 இலுள்ளவாறான மீதி | (1,162,050,602) | |
| திறைசேரி முறி வட்டி | 4,209,564,684 | |
| திறைசேரி முறி கழிவுப் பெறுமதி | 1,522,544,041 | |
| திறைசேரி முறி பெறுமதி | (4,397,000,000) | 173,058,123 |
| **2003.12.31 இலுள்ளவாறான மீதி** | | **(5,521,648,269)** |
| 2004 ஆம் ஆண்டுக்கான இலாபம் | **(970,929,555)** | |
| 2004 ஆம் ஆண்டில் தவணைக் கடன் வட்டி | **(323,812,668)** | **(1,294,742,223)** |
| **2004.12.31 இலுள்ளவாறான சீராக்கப்பட்ட மீதி** | | **(6,816,390,492)** |
| 2005 ஆம் ஆண்டுக்கான இலாபம் | **(164,723,497)** | |
| 2005 ஆம் ஆண்டில் தவணைக் கடன் வட்டி | **(323,812,668)** | **(488,536,165)** |
| **2005.12.31 இலுள்ளவாறான சீராக்கப்பட்ட மீதி** | | **(7,304,926,657)** |
| 2006 ஆம் ஆண்டுக்கான இலாபம் | **(556,539,593)** | |
| 2006 ஆம் ஆண்டில் தவணைக் கடன் வட்டி | **(323,812,668)** | **(880,352,261)** |
| **2006.12.31 இலுள்ளவாறான சீராக்கப்பட்ட மீதி** | | **(8,185,278,918)** |
| 2007ஆம் ஆண்டுக்கான இலாபம் | **(4,854,299)** | |
| 2007 ஆம் ஆண்டில் தவணைக் கடன் வட்டி | **(323,812,668)** | **(328,666,967)** |
| **2007.12.31 இலுள்ளவாறான சீராக்கப்பட்ட மீதி** | | **(8,513,945,885)** |
| 2008 ஆம் ஆண்டுக்கான இலாபம் | **56,294,429** | |
| 2008 ஆம் ஆண்டில் தவணைக் கடன் வட்டி | **(323,812,668)** | **(267,518,239)** |
| **2008.12.31 இலுள்ளவாறான சீராக்கப்பட்ட மீதி** | | **(8,781,464,124)** |
| 2009 ஆம் ஆண்டுக்கான இலாபம் | **(387,649,771)** | |
| 2009 ஆம் ஆண்டில் தவணைக் கடன் வட்டி | **(323,812,668)** | **(711,462,439)** |
| **2009.12.31 இலுள்ளவாறான சீராக்கப்பட்ட மீதி** | | **(9,492,926,563)** |

## கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

காசுப் பாய்ச்சல் கூற்று

டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது

(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாய்களில்)

| | 2011 | 2010 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள்** | | |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட காசு *(குறிப்பு அ)* | 198,987,150 | 314,993,724 |
| முன்னைய ஆண்டு சீராக்கல் | (31,861,731) | (381,412,591) |
| செலுத்திய பணிக்கொடைகள் | (518,470) | (902,870) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)** | **166,606,949** | **(67,321,737)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கொள்வனவு | 60,155,787 | (2,920,801) |
| நிலையான சொத்துக்களின் விற்பனையிலிருந்தான சம்பாத்தியம் | 11,972,000 | 30,554,635 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)** | **48,183,787** | **27,633,834** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| குத்தகை கடன்கொடுத்தோர்கள் | 17,813,531 | - |
| குறுகிய காலக் கடன்களில் அதிகரிப்பு | (26,099,999) | 50,000,000 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல்/(வெளிப்பாய்ச்சல்)** | **(8,286,468)** | **50,000,000** |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு(குறைவு) | 110,136,694 | 10,312,097 |
| **ஆண்டின் ஆரம்பத்திலுள்ளவாறான காசும் காசுக்குச் சமமானவையும்** | 59,871,961 | 49,559,864 |
| **ஆண்டின் இறுதியிலுள்ளவாறான காசும் காசுக்குச் சமமானவையும்** | **170,008,655** | **59,871,961** |

| (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாய்களில்) | 2011 | 2010 |
|---|---|---|
| **குறிப்பு அ - தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட காசு** | | |
| வரி மற்றும் அசாதாரண விடயங்களுக்கு முன்னரான தேறிய இலாபம் | (313,605,785) | (321,512,555) |
| தேய்மானம் | 28,505,697 | 19,576,219 |
| நிலையான சொத்துக்களின் விற்பனை மீதான (இலாபம்) / நட்டம் | (3,071,400) | (30,709,278) |
| பணிக்கொடை ஏற்பாடு | 4,437,033 | 4,781,414 |
| ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்ட பதிவளிப்புச் செய்யப்பட்ட கடன் கொடுத்தோர் | - | 542,164,547 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னதான தொழிற்படு இலாபம்/(நட்டம்)** | **(283,734,455)** | **214,300,347** |

| <u>தொழிற்படு மூலதன மாற்றங்கள்</u> | | |
|---|---|---|
| கையிருப்புக்களில் (அதிகரிப்பு) / குறைவு | (27,344,782) | (80,575,418) |
| வியாபார மற்றும் ஏனைய பெறத்தக்கவைகளில் (அதிகரிப்பு) / குறைவு | (305,969,575) | 301,771,203 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளில் அதிகரிப்பு / (குறைவு) | 330,663,305 | (444,315,076) |
| திறைசேரி மானியத்தில் அதிகரிப்பு / (குறைவு) | 323,812,668 | 323,812,668 |
| ஏனைய செலுத்தத்தக்கவைகளில் அதிகரிப்பு / (குறைவு) | 161,559,988 | - |
| மொத்தம் | **482,721,605** | **100,693,377** |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட காசு** | **198,987,150** | **314,993,724** |

| <u>குறிப்பு ஆ - காசும் காசுக்குச் சமமானவையும்</u> | **31.03.2011** | **31.12.2010** |
|---|---|---|
| கையில் மற்றும் வங்கியிலுள்ள காசு | 204,418,820 | 61,357,878 |
| வங்கி மேலதிகப்பற்று | (34,410,165) | 1,485,919 |
| **தேறிய காசுக்குச் சமமானவை** | **170,008,655** | **59,871,961** |

## கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

## 2011.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

குறிப்பு 01 – கணக்கீட்டுக் கொள்கைகள்

**நிறுவன தகவல்கள்**

**பொதுவானவை**

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் அல்லது கூமொதா ஆனது 1949 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு அரசாங்க நிறுவனமாகும். பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் சேவை வழங்கும் முதன்மை இடமானது இல.27, வெக்ஷால் வீதி, கொழும்பு 02 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

**தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு.**

ஐந்தொகை திகதியன்று தாபனமானது திரண்ட நட்டங்களைக் கொண்டிருந்ததுடன் அதன் நடைமுறைப் பொறுப்புக்களானவை நடைமுறைச் சொத்துக்களை விட ரூபா.660 (மில்) இனால் விஞ்சியுள்ளது. மேலும், கூட்டுத்தாபனமானது வங்கிசார் நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிகளைப் பெற முடியாதிருந்ததுடன் நிண்டகாலமாக கடன்கள் தீர்க்கப்டாமல் இருந்தமையினால் வழங்குனர்கள் கடன் வசதிகளை வழங்குவதற்குத் தயக்கம் காட்டினர். எவ்வாறாயினும், மீளாய்வு காலப்பகுதியில் கூட்டுத்தாபனமானது தொடர்ந்தும் கூட்டுறசவு சங்கங்களின் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளதுடன் சில தனியார் நிறுவனங்களும் அனைத்து வழங்கல்களும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு பதிவாளரினால் வழங்கப்பட்ட ரூபா 50 மில்லியனைக் கொண்டும் பயன்பாடற்ற சொத்துக்களினை விற்பனை செய்வதன் மூலமான வருமானத்தினைக் கொண்டும் இயங்கி வந்தன. இதனால் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் அடிப்படையில் தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பணிப்பாளர்கள் கருதினார்கள். அதாவது, தாபனமானது அதன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை எதிர்காலத்திலும் தொடர்ந்து முன்னெடுக்கும் என்பதுடன் இத்தகைய நிதிக்கூற்றுக்கள் கையொப்பமிடப்பட்ட திகதியிலிருந்து ஆகக்குறைந்தது பன்னிரண்டு மாத காலப்பகுதிக்குள் நிறுவனம் வீழ்ச்சியடைந்தாலும் அதன் கடப்பாடுகள் தொடர்ந்தும் நிறைவேற்றப்படும் என்பதாகும்.

**முதன்மை நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாட்டின் தன்மை**

இலங்கையிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் மொத்த மற்றும் சில்லறை வசதிகளினை வழங்குதல், லங்கா சதொசவிற்கு மா அரைத்தல் வசதியினை வழங்குதல் மற்றும் லங்கா சதொசவிற்கு போக்குவரத்து வசதியினை வழங்குதல் என்பன தாபனத்தின் முதன்மைச் செயற்பாடுகளாகும்.

**ஊழியர்களின் எண்ணிக்கை**

ஆண்டின் இறுதியில் ஊழியர்களின் எண்ணிக்கை 295 ஆகும். (2010/247

**முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு**

**பொதுவான கொள்கைகள்**
**தயாரிப்பு அடிப்படை**

ஐந்தொகை, வருமானக் கூற்று, உரிமை மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் (நிதிக் கூற்றுக்கள்) என்பன இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட நியமங்களுக்கமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்கியுள்ளன. தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் குறித்த சில ஆதனம், பொறி

மற்றும் உபகரணம் என்பவற்றின் மீள் பெறுமதி மதிப்பீட்டுக்கான வரலாற்றுக் கிரய கோட்பாட்டின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**ஒப்பீட்டுத் தகவல்**

இந்தக் கணக்கீட்டுக் கொள்கைகள் தாபனத்தினால் நிலையாகப் பிரயோகிக்கப்பட்டு வந்துள்ளதுடன், முன்னைய ஆண்டிலும் அவ்வாறே நிலையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டின் தொகைகளும் சொற்களும் நடைமுறை ஆண்டின் சமர்ப்பித்தலினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான வகையில் மீள ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

**சொத்துக்களும் அவற்றின் பெறுமதி மதிப்பீட்டு அடிப்படைகளும்**
**ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன திரண்ட தேய்மானம் / பழுதடைந்த நட்டத்தின் ஏதேனும் திரண்ட தொகை கழிக்கப்பட்ட செலவில் / நியாயமான பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பனவற்றின் கிரயமானது, சொத்துக் கொள்ளலுக்கு நேரடியாக ஏற்படக் கூடிய செலவுகளை உள்ளடக்குகின்றது. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன வேறுபட்ட பயன்பாட்டுக் காலங்களினைக் கொண்டுள்ள பாகங்களினைக் கொண்டிருக்கும் போது அத்தகைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன தனித்தனியாக கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றினைக் கொண்டு வருவதற்கான செலவுகள், கொண்டு செல்வதற்கான செலவுகள் அறவிடப்பட முடியாத சூழ்நிலையில் அத்தகைய நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் ஏற்படுகின்ற போதெல்லாம் பழுதடைந்தவைக்காக மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். சொத்தினைக் கொண்டு வருவதற்காக ஏற்படும் செலவானது, அதன் மதிப்பீடு செய்யப்பட்ட அறவிடத்தக்க தொகையிலும் பார்க்க கூடுதலாக இருக்குமாயின், சொத்தொன்றினைக் கொண்டு வருவதற்காக ஏற்படும் செலவானது அதன் அறவிடத்தக்க தொகைக்கு பதிவளிப்பு செய்யப்படும்.

அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. பொறி, ஆதனம் மற்றும் உபகரணம் என்பன அதனை தொடர்ந்து மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்படுகையில் கொண்டு வருதல் செலவில் ஏதேனும் அதிகரிப்பு காணப்படுமாயின், அவை பங்குதாரர்களின் உரிமையிலுள்ள மீள் பெறுமதி ஒதுக்கத்தில் செலவு வைக்கப்படும். முன்னைய அதிகரிப்புக்கள் சீர்செய்யப்பட்ட அதே சொத்தின் உரிமையிலுள்ள மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கெதிராக நேரடியாகவே அறவிடப்படுவதுடன், வேறு ஏதேனும் மிகை அல்லது ஏனைய அனைத்து குறைவுகளும் வருமானக் கூற்றில் அறவிடப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் மீள் மதிப்பீடானது தொழில் சார்ந்த முறையில் தகைமை பெற்ற சுயாதீன பெறுமதி மதிப்பீட்டாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**உடனடுத்துவரும் செலவு**

உடனடுத்துவரும் செலவுகள் தாபனத்திற்கு பாய்ச்சலினை வழங்கும் விடயத்துடன் ஒருங்கிணைந்த எதிர்கால பொருளாதார தன்மைகள் மற்றும் உண்மைத் தன்மையினை அளவிடக் கூடிய விடயத்தின் செலவு என்பன சாத்தியமானதாக இருக்கக் கூடியதாக இருக்கும் போது மட்டுமே பொருத்தமானதாக தனியான சொத்தாக அங்கீகரிக்கப்பட்டு சொத்து கொண்டு வரும் செலவினுள் உள்ளடக்கப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன மாற்றீடு செய்தல், விற்பனை அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்கால பொருளாதார நன்மைகள் கிடைக்கப் பெறாத போது அங்கீகரிக்கப்படுவதில்லை. ஏதேனும் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் அங்கீகாரம் மறுக்கப்படுவது தொடர்பில் எழுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது அங்கீகாரம் மறுக்கப்படுகின்ற ஆண்டின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது. ஏனைய அனைத்து பழுதுபார்த்தல்கள் மற்றும் பேணுதல் செலவுகள் அவை ஏற்பட்ட நிதிசார் காலப்பகுதியிலுள்ள வருமானக் கூற்றில் அறவிடப்படுகின்றது.

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

2011.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**தேய்மானம்**

தேய்மான ஏற்பாடானது காணி தவிர்ந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒவ்வொரு பாகத்தினதும் மதிப்பீடு செய்யப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்றது. தேய்மானமானது குத்தகை ஆதனம் உள்ளடங்கலான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகிய அனைத்து சொத்துக்களினதும் நேர்கோட்டு அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்றது.

குத்தகை ஆதனத்திற்கு அவற்றின் கொள்வனவில் அல்லது மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தில் அவற்றின் எஞ்சிய பெறுமதிகளுக்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் கணிப்பீடு செய்யப்படுகிறது.

பயன்படுத்தப்படுகின்ற வீதங்கள் பின்வருமாறு;

| | |
|---|---|
| கட்டிடம் | 5% |
| பொறி மற்றும் இயந்திரம் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| தளபாடமும் பொறிகளும் | 33 1/3% |
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| கணனியும் துணை பொருட்களும் | 33 1/3% |
| பண்டகசாலை உபகரணம் | 10% |
| ஏனைய உபகரணங்கள் | 10% |
| கருவிகள் | 10% |

**முதலீடுகள்**

நீண்ட கால அடிப்படையில் வைத்திருக்கப்படுகின்ற விலை கூறப்படாத முதலீடுகள் நடைமுறையல்லா அல்லது கிரயத்தில் கூறப்பட்ட முதலீடுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

**கையிருப்புக்கள்**

கையிருப்புக்கள், குறைந்தளவில் விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு முழுமையான ஏற்பாட்டினை மேற்கொண்ட பின் குறைந்த பெறுமதியில், தேறிய தேறத்தக்க பெறுமதியில் மதிப்பிடு செய்யப்படுகின்றன. தேறிய தேறத்தக்க பெறுமதியானது குறைத்து மதிப்பிடப்பட்ட தெறக்கூடிய பெறுமதியில் அல்லது விற்பனை செய்யக்கூடிய நிலைக்கு அவற்றின் தற்போதைய நிலையினை மாற்றுவதற்கான செலவில் விற்பனை விலையானது மதிப்பிடப்படுகின்றது.

**பெறத்தக்கவைகள்**

வியாபார பெறத்தக்கவைகள், பெறுமதி இழப்புக்கான குறைந்த ஏற்பாட்டிற்காக தேறக்கூடிய பெறுமதியிலை மதிப்படப்படும் தொகைகளினை அங்கீகரிக்கின்றன. தாபனமானது, வருமதியான தொகையினை முழுமையாக அறவீடு செய்ய முடியாதவிடத்து வியாபாரப் பெறத்தக்கவைகளின் பெறுமதி இழப்புக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. ஏற்பாட்டுத் தொகையானது, சொத்தினை கொண்டு நடாத்துவதற்கான தொகைக்கும் மதிப்பிடப்பட்ட தேறக்கூடிய பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக இருக்கும். ஏற்பாட்டுத் தொகையானது விற்பனை மற்றும் விநியோக செலவுகளை வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வியாபாரப் பெறத்தக்கவைகள் அறவிடு செய்யப்பட முடியாதவிடத்து, அவை வியாபார பெறத்தக்கவைகளுக்கான ஏற்பாட்டுக் கணக்கிற்கு எதிராக பதிவளிப்பு செய்யப்படும். அதனைத் தொடர்ந்து முன்னதாக பதிவளிப்பு செய்யப்பட்ட தொகைகள் வருமானக் கூற்றில் செலவு வைக்கப்படுகின்றன.

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

2011.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**காசும் காசுக்கு சமமானவையும்**

காசும் காசுக்கு சமமானவையும் கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு, குறுகிய காலத்தில் பணமாக மாற்றக்கூடிய திரவத்தன்மை கூடிய முதலீடுகளையும் கணிசமான இடரின்றி பணமாக மாற்றக்கூடிய சொத்துக்களையும் குறிப்பிடுகின்றது.

இந்த நோக்கத்திற்காக காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவை கொண்டிருக்கின்ற கையிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு என்பவற்றினையும் சென்மதியாகவுள்ள தேறிய வங்கி மேலதிகப்பற்றினையும் குறிப்பிடுகின்றது. செலுத்தப்பட்ட வட்டியானது தொழிற்படும் காசப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்படுவதுடன் பெறப்பட்ட வட்டி மற்றும் பங்கிலாபம் என்பன முதலீடு செய்யப்படும் காசுப் பாய்ச்சலாக வைகப்படுத்தப்படுவதுடன் செலுத்திய பங்கிலாபமானது காசுப்பாய்ச்சல் கூற்றினை சமர்ப்பிக்கும் நோக்கத்திற்கான நிதியிடல் காசுப் பாய்ச்சல்களாவும் வகைப்படுத்தப்படுவதுடன் காசுப் பாய்ச்சல் கூற்றானது நேரடியற்ற முறையில் தயாரிக்கப்படுகின்றன.

**ஊழியர் பயன்கள்**

**வரையறுத்த பயன் திட்டம் - ஓய்வூதிய பணிக் கொடை**

இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 16 இற்கமைவாக ஊழியரின் சேவைக் காலத்தில் முதலாவாது ஆண்டிலிருந்து இழைப்பாறும் போது முழுமையான ஏற்பாடு வழங்கப்படுகின்றது. "இழைப்பாறல் பயன் செலவுகள்| சேவைக் காலத்தின் ஒவ்வொரு ஆண்டுக்குமான அரை மாத சம்பளம்.

எவ்வாறாயினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இல. பணிக்கொடை சட்டத்தின் கொடுப்பனவுக்கமைவாக ஊழியர் ஒருவருக்கான பணிக்கொடைப் பொறுப்பானது ஐந்து வருட தொடர்ச்சியான சேவையினை பூர்த்தி செய்கின்ற போது மாத்திரம் எழுகின்றது.

பொறுப்பானது வெளியே நிதியிடப்படாது உண்மைப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது. இந்த விடயமானது ஐந்தொகையில் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் காட்டப்படுகின்றது.

**வரையறுத்த பங்களிப்புத் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும்ஊழியர் நம்பிக்கை நிதியம்**

வரையறுத்த பங்களிப்புத் திட்டமானது வேறொரு உரிமைக்கு நிலையான பங்களிப்பினைச் செலுத்துகின்ற உரிமையொன்றின் கீழான ஊழியத்திற்குப் பின்னரான பயன் திட்டம் என்பதுடன் மேலதிக தொகைகளினைச் செலுத்துவதற்கான சட்ட கடப்பாடுகளை கொண்டிருக்கும்.

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்கான தகைமையினைக் கொண்டுள்ள அனைத்து ஊழியர்களும் உரிய சட்டதிட்டங்களுக்கமைவாக குறித்த நிதியங்களில் பங்களிப்புச் செய்வதற்கு உரித்துடைவரகாளாவர். வரையறுத்த பங்களிப்புத் திட்டங்களுக்கான தொழில் வழங்குனரின் பங்களிப்பு மேற்கொள்ளப்படும் போது வருமானக் கூற்றில் செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது.

**குத்தகைகள்**

**நிதிக் குத்தகைகள்**

சொத்துக்கள் உடன்படிக்கை மேற்கொள்ளப்படும் போது நிதிக் குத்கையினால் கொள்ளப்படுவதாக கருதப்படுகின்றன. தாபனமானது அதனைத் தொடர்ந்து சொத்துக்கான உரிமையினையும் அதன் இடர்களினையும் பொறுப்பேற்பதாக கருதப்படுகின்றது. நிதிக் குத்தகை மூலம் கொள்ளப்படுகின்ற சொத்துக்கள் அவற்றின் முகப் பெறுமதியிலும் குறைந்த பெறுமதியில் சமமான தொகையில் கணிப்பிடப்படுவதுடன் ஆகக் குறைந்த குத்தகை கொடுப்பனவின் தற்போதைய பெறுமதியானது குறைந்த திரண்ட தேய்மானத்தினையும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களையும் கொண்டிருக்கும்.

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

2011.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**தொழிற்பாட்டு குத்தகை**

குத்தகை வழங்குநர் குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் அனைத்து இழப்புச் சாத்தியங்களையும் பயன்களையும் தன்னிடம வைத்திருக்கும் குத்தகைகளை தொழிற்பாட்டுக் குத்தகை என வகைப்படுத்துவர். தொழிற்பாட்டு குத்தகையின் கீழான கொடுப்பனவுகள் குத்தகைக் காலப் பகுதியில் நேரடியான செலவுகளாக வருமானக் கூற்றில் கருதப்படும்.

**ஒதுக்கீடுகள், நானாவித சொத்துக்கள் மற்றும் நானாவிதப் பொறுப்புக்கள்**

கடந்த கால நிகழ்வுகளின் பயனாக நிறுவனமொன்றுக்கு சட்டரீதியான அல்லது சம்பிரதாய பூர்வமான கடப்பாடுகள் காணப்படுமிடத்து அவற்றுக்காக ஒதுக்கீடுகள் செய்யப்படுவதுடன் அத்தகைய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கான பொருளாதாரப் பயன்கள் உள்ளிட்ட வளப் பாய்ச்சல் மேற்கொள்ளப்பட முடியும். அத்தகைய பொறுப்பொன்றை நிறைவேற்றுவதற்கு நம்பகமான நிதி மதிப்பீடுகளைத் தயாரிப்பது அவசியமாகும்.

வளப் பாய்ச்சல் திறக்கப்பட்ட போதிலும் நானாவித பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக் குறிப்புக்களாகக் காட்டப்படும்.

**பொறுப்புக்கள்**

ஐந் தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் அடிப்படையிலான அனைத்துப் பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்கான குறிப்புக்களின் ஊடாகக் காட்டப்பட்டுள்ளன.

**சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்கள்**

நிச்சயமற்ற பயனைக் கொண்ட உயிர்ப்பான காணி போன்ற சொத்துக்கள் பெறுமானத் தேய்வுக்கு உட்படுவதில்லை. அதே நேரம் சேதங்களுக்கு பெறுமானத் தேய்வு கழிக்கப்படும். பெறுமானத் தேய்வுக்கு உள்ளாகும் சொத்துக்களை வருடாந்தம் தொழில்பாட்டுப் பெறுமதியை ஈடு செய்ய முடியாதவிடத்து விடயங்கள் அல்லது வேறுபாடுகளின் ஊடாகக் காட்டப்படும் சந்தர்ப்பங்களில் அதற்கு முன்னரான சேதங்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும். சொத்து ஒன்றின் தொழிற்பாட்டுப் பெறுமதி அதன் அறவிட முடியுமான தொகையை விஞ்சியதாக இருக்குமிடத்து, நிதிக் கூற்றில் சேதங்கள் நட்டங்களாகக் காட்டப்படும். சொத்து ஒன்றின் நியாயமான பெறுமதியை விட அதிகமான அதன் விற்பனை விலைக்கும் பயன்பாட்டு விலைக்கும் குறைந்த பெறுமதி அறவிடப்படும் தொகையாகும்.

**வரி அறவீடு**

**வருமான வரி**

நிதிக் கூற்றுக்களிலுள்ள வருமானங்கள் மற்றும் செலவுகளின் மீதான வருமான வரிகள் வருமான வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கக் கணிக்கப்படும்.

**வரி செலுத்தப்படும் வழங்கல்களுக்கான பெறுமதி சேர் வரி**

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் திருத்தங்களுக்கும் இணங்க வரி செலுத்தப்படும் வழங்கல்களுக்கான பெறுமதி சேர் வரி செலுத்தப்படுகின்றது.

**பங்குகள் தொடர்பான தகவல்கள்**

மொத்த மற்றும் சில்லறைச் சேவை (உதாரணமாக- நெல் குற்றுதல், போக்குவரத்து)நிறுவனங்களிலுள்ள அடிப்படைப் பங்குகள். நிறுவனத்திற்கு உலகளாவிய பங்குகள் எதுவும் காணப்படவில்லை. நிறுவனத்தின் முகாமைத்துவ மற்றும் உலகளாவிய வகைப்படுத்தல்களுக்கு ஏற்ப பங்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

2011.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

பங்குகளின் விலைகள் பிரிவினால் புரிந்துணர்வின் அடிப்படையில் உடன்பாடு காணப்படும் விலைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

பகுதியொன்றுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்ற மற்றும் நியாயமான அடிப்படையில் காட்ட முடியுமான விடயங்களில் பங்குகளின் பயன்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளடங்கும். வருமானம் உழைக்கும் சொத்துக்கள் மற்றும் வருமானங்கள், வட்டி அறவிடப்படும் கடன்கள், கடன் பெறுகைகள் மற்றும் செலவுகள் மற்றும் இணைந்த சொத்துக்கள் மற்றும் செலவுகள் என்பன பிரிக்கப்படாத விடயங்களின் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பங்குகளுக்கான மூலதனச் செலவினம் என்பது கணக்கீட்டுக் காலப்பகுதியை விட அதிகமாகப் பயன்படுத்தும் நோக்கில் பங்குச் சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது குறித்த காலப்பகுதியில் செலவாகும் மொத்தச் செலவினம் பங்குகளுக்கான மூலதனச் செலவினமாகும்.

**ஐந்தொகைக்குத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**

ஐந்தொகைத் திகதிப் பின்னரான கவனத்திற் கொள்ளப்படும், காட்டப்படும் மற்றும் உரிய சந்தர்ப்பங்களில் செம்மையாக்கம் செயப்படுகின்ற அனைத்துப் பொருட்களையும் குறிக்கும்.

**ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி முதல் நடைமுறைப்படுத்தபடாத வெளியிடப்பட்ட கணக்கீட்டுத் தரநியமங்கள்**

இலங்கை உத்தரவுபெற்ற கணக்கீட்டு நிறுவனம் SLFRS(IFRS க்கு சமனானது) மற்றும் LKAS (IAS க்குச் சமனானது) என்பவற்றுடன் தொடர்புடைய வழங்கப்பட்ட இலங்கை புதிய கணக்கீட்டுத் தரநியமங்கள், நிறுவனத்தினால் 2012 ஜனவரி 01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேற்குறித்த நிதிக் கூற்றுக்களுக்கு அத்தரநியமங்களைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் பயன்களை மதிப்பீடு செய்யும் பணியில் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. அதன் பெறுபேறுகள் இவ் அறிக்கை தயாரிக்கப்படும் திகதி வரையில் கிடைக்கப் பெறவில்லை.

**வருமானக் கூற்று**

இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களில் காட்டப்பட்டுள்ள நிறுவனத்தின் செயலாற்றுகையுடன் தொடர்புடைய அடிப்படைகளைப் பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்தி செலவுகளுக்குரிய செயற்பாடுகளின் அடிப்படையில் வருமானக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**வருமானங்கள்**

நிறுவனத்தின் வருமானம் நுகர்வோருக்குப் பொருட்களை வழங்கும் பற்றுச்சீட்டுக்களின் பெறுமதிகளாகும்

**வருமான அங்கீகாரம்**

வருமானமானது தாபனத்திற்கு பொருளாதார ரீதியிலான பயன்களை வழங்குவதற்கான சாத்தியப்பாட்டினை விரிவுபடுத்துவதற்காக அங்கீகரிக்கப்படுவதுடன் நம்பகத்தகுந்த வருமானத்தினை கணிப்பிடவும் முடிகின்றது. வருமானமானது பெற்ற அல்லது பெறத்தக்க தேறிய வியாபாரக் கழிவுகள் மற்றும் தாபனத்தின் தேறிய விற்பனையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகள் என்பவற்றினைக் கருத்தில் கொண்டு நிலையான விலையில் கணிப்பீடு செய்யப்படுகின்றது.

வருமானத்தினை அங்கீகரிப்பதற்குப் பின்வரும் முறைகளை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.பொருட்களின் விற்பனை மூலமான வருமானமானது, முக்கியமான இடர் மற்றும் கொள்வனவாளருக்கு உரிமை மாற்றப்படுகின்ற போது அங்கீகரிக்கப்படுவதுடன் இணைந்த செலவுகள் மற்றும் பொருட்களின் சாத்தியமான திரும்பல்

என்பவற்றினை நம்பகத்தன்மையுடன் மதிப்பீடு செய்ய முடிவதுடன் பொருட்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் ஈடுபாடு தொடர்ச்சியாக இருக்காது.

வாடகை வருமானமானது, சேர்ந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

வட்டி வருமானமானது நிலுவையாக இருக்குமாயின் அங்கீகரிக்கப்படுகின்றது.

பங்கிலாப லருமானமானது அநுமதிக்கப்பட்ட பங்கிலாபத்தினை பெறுவதற்கான உரிமையினை கொண்டிருக்கும் போது சேர்ந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் எபகரணங்களின் விற்பனையிலிருந்து எழுகின்ற வருமானத்தின் சம்பாத்தியம் அல்லது நட்டங்கள் மற்றும் முதலீடுகள் உள்ளடங்கலான ஏனைய நடைமுறைச் சொத்துக்கள், அத்தகைய சொத்துக்களின் விற்பனைத் தொகை மீதான தேறிய விற்பனைச் சம்பாத்தியங்களிலிருந்து கழிப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் வருமானக கூற்றில் சேர்க்கப்படுகின்றன.

ஏனைய அனைத்து வருமானமும் சேர்ந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனை**

ஆதனம், பொறி மற்ற்ம் உபகரணங்களின் விற்பனை மீதான சம்பாத்தியம் அல்லது நட்டங்கள் வருமானக் கூற்றில் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன.

**செலவினம்**

செலவினங்கள், ஏற்பட்ட செலவுக்கும் குறித்த பொருள் தொடர்பில் சம்பாதித்த வருமானத்திற்கும் இடையில் நேரடியான தொடர்பின் அடிப்படையில் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. வியாபாரத்தினைக் கொண்டு நடாத்துதல் மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வினைத்திறன் வாய்ந்த முறையில் பேணுதல் என்பவற்றிற்காக ஏற்பட்ட அனைத்து செலவுகளும் வருமானக் கூற்றில் அறவீடு செய்யப்படுகின்றன.

**அரசாங்க பிணைகள்**

ஆறு வர்த்தக வங்கிகளின் கடன்களைக் கொடுத்து தீர்ப்பதற்காக தாபனத்தின் சார்பில் திறைசேரியினால் முறிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. முறியின் தற்போதைய பெறுமதியானது நீண்டகால பொறுப்பில் தாபனத்தின் ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டின் தற்போதைய பெறுமதிக்கும் முறியின் முகப் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு முறியின் முதிர்வுக் காலம் வரையில் வருமானக் கூற்றில் அறவீடு செய்யப்படுகின்றது.

## கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்
**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**
**டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**
**(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாய்களில்)**

**குறிப்பு 02 - புரள்வு**

| | | |
|---|---|---|
| வியாபார வருமானம் | 313,800,611 | 185,605,726 |
| கழி: புரள்வு வரி | - | 2,784,086 |
| **மொத்தம்** | **313,800,611** | **182,821,640** |

இகநி 29 இற்கமைவாக வருமானமானது (இறைவரி) சாதாரண நடவடிக்கைகளிலிருந்து பெறத்தக்க அறவிடத்தக்கதான நியாயமான பெறுமதிகளில் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

**குறிப்பு 03 - விற்பனைச் செலவு**

| | | |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 31,220,951 | 29,942,699 |
| கூட்டு: கொள்வனவுகள் (குறிப்பு இல - 03.1) | 248,161,635 | 261,403,176 |
| நேரடிச் செலவு (குறிப்பு இல - 03.2) | 25,675,503 | - |
| | 305,058,089 | 291,345,875 |
| கழி: போக்குவரத்துப் பிரிவு இருப்பு பதிவளிப்பு | 2,360,907 | - |
| கழி: இறுதி வியாபார இருப்பு | 41,635,183 | 110,518,117 |
| | **43,996,090** | |
| **மொத்தம்** | **261,061,999** | **180,827,758** |

இகநி 05 இற்கமைவாக (சரக்கிருப்புக்கள்), சரக்கிருப்புக்காக சொத்துக்களாகும்.
அ) சாதாரண வியாபார நோக்கில் விற்பனைக்காக, வைத்திருத்தல்.
ஆ) அத்தகைய விற்பனைக்கான உற்பத்திச் செயல்முறையிலுள்ளவை அல்லது
இ) பொருட்கள் வடிவிலுள்ளவை அல்லது உற்பத்தி செயல்முறையில் அல்லது சேவை வழங்கலில் நுகரப்படுகின்ற

எனவே, நிறுவனமானது விற்பனைச் செலவினைக் கணிப்பிடும் நோக்கத்திற்கான வியாபார இருப்பினை மட்டும் அங்கீகரித்துள்ளதுடன், போக்குவரத்துப் பிரிவின் இருப்பு மற்றும் பொதியிடல் பிரிவின் இருப்பு என்பன 2011 ஆம் ஆண்டுக்கான ஆரம்ப மீதியிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| போக்குவரத்துப் பிரிவின் இருப்பு (இறுதி இருப்பு) | 2,360,907.00 |
| கட்டிட பிரிவு இருப்பு | 4,143,032.00 |
| பொதியிடல் பொருட்கள் | 454,513.00 |
| | **6,958,452.00** |

2011 இல் போக்குவரத்துப் பிரிவுக்குரிய ரூபா 2,360,907 தொகையுடைய இருப்பானது 2011/12/31 இலுள்ளவாறான பௌதீக இருப்புக்களில் காணப்படாமையினால், இவை நட்டக் கணக்கில் அறவீடு செய்யப்பட்டிருந்தது. கட்டிடப் பிரிவிலுள்ள ரூபா 4,143,032 இருப்பும் ரூபா 454,513 பொதியிடல் பொருள் இருப்பும் 2011 ஆம் ஆண்டுக்கான விற்பனைச் செலவினைக் கணிப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. போக்குவரத்துப் பிரிவின் ரூபா 2,360,907 பெறுமதியான இருப்பானது 2011 இல்

கூட்டுறவு வியாபாரமானது நுகர்வோருக்கு சலுகை விலைகளில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல் மற்றும் உள்ளூர் சந்தை விலைகளில் காணப்படும் விலைத்தளம்பல்களைக் கட்டுப்படுத்தல் போன்ற நோக்கங்களுக்காக 2010 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது. 2011 இல் இத்தொழிற்பாட்டிலிருந்து ரூபா 36,097,856.26 தொகையுடைய மொத்த நட்டம் மற்றும் ரூபா 72,421,133 தொகையுடைய தேறிய நட்டம் ஏற்பட்டிருந்தன. இத்தகைய வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள் (கூட்டுறவுத் தொழிற்பாட்டுடன் தொடர்புடைய ஆரம்ப இருப்பு, கொள்வனவு, விற்பனைகள் மற்றும் இறுதி இருப்புக்களில் உள்ளடங்கலானவை) கூ.மொ.தாபனத்தின் வருமானக் கூற்றின் 2011 இற்கான தேறிய இலாப / நட்டக் கணிப்பீட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. இத்தொழிற்பாட்டின் 2011 ஆம் ஆண்டுக்கான இறுதி விளைவானது **கூட்டுறவு ஆணையாளரின் கடன் செலுத்தத்தக்க கணக்கில்** சீராக்கப்பட்டுள்ளது.

**2011 ஆம் ஆண்டில் கூட்டுறவு கணக்கு விபரம்**

| களஞ்சியங்கள் | ஆ.இருப்பு | கொள்வனவு | இறுதி இருப்பு | மொத்த இலாபம் |
|---|---|---|---|---|
| குருநாகல் | 9,441,119 | 152,921,041 | 2,972,703 | 54,953,002 |
| அநுராதபுரம் | - | 45,091,392 | 515,507 | 11,017,373 |
| அறநாயக்க | - | 44,801,297 | 2,596,556 | 33,709,257 |
| பதுளை | - | 16,849,791 | 1,843,895 | 25,386,113 |
| கண்டி | | 73,690,286 | 4,876,996 | 72,760,235 |
| மாளிகாவத்தை | - | 89,394,349 | 139,244 | (24,152,246) |
| மாத்தறை | 13,335,290 | 93,879,912 | 1,742,261 | 33,329,656 |
| மக்லம் | 51,923,213 | 429,883,602 | 9,646,992 | (353,933,052) |
| மொனராகலை | - | 72,532,431 | 762,040 | 49,235,370 |
| பொலன்னறுவை | - | 9,687,222 | 1,780,610 | 4,416,677 |
| இரத்தினபுரி | - | 62,278,696 | 1,740,447 | 48,809,563 |
| வவுனியா | | 48,910,596 | 1,182,271 | 8,370,196 |
| **மொத்தம்** | 74,699,622 | 1,139,920,615 | 29,799,522 | (36,097,856) |

## கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்
### நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
### டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது
### (அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாய்களில்)

**குறிப்பு 05 - நிருவாகம் மற்றும் தாபன செலவுகள்**

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் கட்டணங்களும் படிகளும் | 1,021,308 | 648,275 |
| தங்குமிட வசதிகளுக்கான செலவு | 21,081 | - |
| உடன்படிக்கை புதுப்பித்தல் கட்டணங்கள் | 11,200 | - |
| பதவியினர் சம்பளங்களும் கூலிகளும் (தனிப்பட்ட செலவு) | 70,219,323 | 34,540,779 |
| பதவியினர் படிகள் | 839,832 | - |
| சுத்திகரிப்பு செலவுகள் | 2,193,342 | - |
| டயலொக் தொலைக்காட்சி கட்டணங்கள் | 11,691 | - |
| விசாரணைக் கட்டணங்கள் | 15,375 | |
| தபால் செலவுகள் | 34,835 | - |
| பாதுகாப்பு செலவுகள் | 2,384,729 | - |
| சேவைக் கட்டணங்கள் | 8,062 | - |
| விருந்துபசார செலவு | 438,336 | - |
| பதவியினர் மிகை ஊதியம் | 214,000 | 111,500 |
| நன்கொடை | 201,435 | - |
| பணிக்கொடை | 4,437,033 | 2,390,707 |
| வாடகையும் வரிகளும் | 5,987,062 | 2,216,599 |
| கணக்காய்வு கட்டணங்கள் | - | 800,000 |
| பதவியினர் நலன்புரி | 1,076,236 | 731,264 |
| தேய்மானம் | 28,505,697 | 9,788,111 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 4,964,102 | 2,439,960 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 1,277,875 | 609,990 |
| உ.பொ.செ.வரி | 13,662 | - |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 5,130,535 | - |
| விளம்பரம் | 1,006,591 | 104,780 |
| பதவியினர் நட்டஈடு | - | 618,890 |
| காப்புறுதி | 577,754 | 252,550 |
| சட்ட கட்டணங்கள் | 742,541 | 1,393,797 |
| தொழில்சார் கட்டணங்கள் | 38,260 | 134,738 |
| பிரயாணங்களும் போக்குவரத்தும் | 757,684 | 3,967,908 |
| மிகைக் கட்டணம் | - | - |
| உசாவுதல் கட்டணம் | 30,000 | - |
| பிரயாணப் படிகள் | 167,702 | - |
| சிகிச்சைப் படிகள் | 1,056,455 | - |
| மின்சாரம் | 16,897,246 | 6,226,896 |
| நீர் செலவுகள் | 1,237,751 | - |
| தொலைபேசி மற்றும் தொலைநகல் | 1,155,427 | 472,331 |
| அச்சிடல் மற்றும் காகிதாதி | 2,106,798 | 200,645 |
| உறுப்புரிமைக் கட்டணம் | 33,500 | - |
| வாகனப் படிகள் | 1,059,925 | - |

## கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

**டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

**(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாய்களில்)**

| | | |
|---|---|---|
| | | - |
| பழுதுபார்த்தல்களும் பேணுதல்களும் | 545,286 | 8,330,387 |
| சீருடை கொடுப்பனவுகள் | 50,975 | - |
| நானாவிதச் செலவுகள் | 152,555 | - |
| மருத்துவ பட்டியல் | 5,500 | - |
| சேவைக் கட்டணங்கள் | 25,000 | - |
| தே.க.வரி செலவுகள் | 853,038 | - |
| பெ.சே.வரி செலவுகள் | 5,514,191 | - |
| கோரப்படாத பெசேவ | 198,170 | - |
| தண்டக் கட்டணங்கள் | 3,933 | - |
| நானாவிதம் | 836,962 | 2,877,378 |
| **மொத்தம்** | **165,586,679** | **78,857,485** |

**குறிப்பு 06 - விற்பனை மற்றும் விநியோகம்**

| | | |
|---|---|---|
| விற்பனை பதவியினர் சம்பளங்களும் கூலிகளும் | 2,019,715 | 34,540,779 |
| ஊழியர் சேமலாப நிதியம் | - | 2,439,960 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | - | 609,990 |
| பதவியினர் மிகை ஊதியம் | - | 111,500 |
| பொதியிடல் கட்டணங்கள் | 40,375 | - |
| போக்குவரத்து செலவுகள் | 6,096,040 | - |
| எரிபொருள் போக்குவரத்துப் பிரிவு | 7,769,433 | - |
| பணிக்கொடை | - | 2,390,707 |
| பதவியினர் நலன்புரி | - | 731,264 |
| போக்குவரத்தும் உதவுதொகையும் | - | 3,980,408 |
| வாடகையும் வரிகளும் | 498,732 | 3,454,099 |
| அஞ்சல் மற்றும் தொலைபேசி | - | 472,331 |
| நானாவித செலவுகள் | - | 2,877,377 |
| விலை குறைக்கப்பட்ட இருப்பு மீதான இலாபம் / நட்டம் | - | 28,418 |
| மின்சாரம் | - | 6,226,896 |
| விளம்பரம் மற்றும் விற்பனை மேம்பாடு | - | 104,780 |
| அச்சிடல் மற்றும் காகிதாதி | - | 200,645 |
| தேய்மானம் | - | 9,788,111 |
| கட்டிட திருத்தங்களும் பேணுதல்களும் ............ | 18,957,238 | - |
| கட்டிட திருத்தங்களும் பேணுதல்களும் - போக்குவரத்துப் பிரிவு | 2,002,756 | 8,330,387 |
| அறவிட முடியாக்கடன் மற்றும் ஐயக் கடன்களுக்கான ஏற்பாடு | - | 8,630,612 |
| தொழில்சார் கட்டணங்கள் | - | 134,738 |
| பாலந்தராசு கட்டணங்கள் | 2,500 | - |
| காப்புறுதி | - | 252,550 |
| கழிவுகள் | 28,931 | - |
| உரிமக் கட்டணங்கள் | 432,303 | 537,582 |
| பதவியினர் நட்டஈடு | 219,590 | 618,890 |
| **மொத்தம்** | **38,067,612** | **86,462,024** |

குறிப்பு 09 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| விபரணம் | கிரயம் | | | | தேய்மானம் | | | | WDV |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2011.01.01 இலுள்ளவாறு | குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேர்க்கைகள் | குறித்த ஆண்டு காலப்பகுதியில் விற்பனைகள் | 2011.12.31 இலுள்ளவாறு | 2011.01.01 இலுள்ளவாறு | ஆண்டுக்கானது கட்டணங்கள் | ஆண்டுக்கானது விற்பனைகள் | 2011.12.31 இலுள்ளவாறு | 2011.12.31 இலுள்ளவாறு |
| இறையில் ஆதனம் | 955,510,235 | - | - | 955,510,235 | - | - | - | - | 955,510,235 |
| குத்தகை ஆதனம் | 2,311,930 | - | - | 2,311,930 | - | - | - | - | 2,311,930 |
| இறையில் ஆதன கட்டிடம் | 220,090,417 | 13,666,639 | - | 233,757,056 | 141,147,694 | 10,989,657 | - | 152,137,351 | 81,619,705 |
| குத்தகை ஆதன கட்டிடம் | 2,288,203 | - | - | 2,288,203 | 2,158,667 | 48,335 | - | 2,207,002 | 81,201 |
| முடிக்குரிய காணி கட்டிடங்கள் | 82,252,459 | 8,016 | - | 82,260,475 | 49,615,711 | 3,200,400 | - | 52,816,111 | 29,444,364 |
| வொக்ஸோல் கராஜ் | 16,460,291 | - | - | 16,460,291 | 10,919,699 | 823,015 | - | 11,742,714 | 4,717,577 |
| பொறி மற்றும் இயந்திரம் | 88,163,606 | 127,000 | - | 88,290,606 | 87,928,645 | 215,712 | - | 88,144,357 | 146,249 |
| மோட்டார் வாகனங்கள் | 39,475,999 | 22,588,950 | 12,082,000 | 49,982,949 | 7,474,800 | 7,895,200 | 3,181,400 | 12,188,600 | 37,794,349 |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | 47,778,931 | 13,190,312 | - | 60,969,243 | 46,469,112 | 4,201,628 | - | 50,670,740 | 10,298,503 |
| கணனி துணைப் பொருட்கள் | 76,270,112 | 2,104,512 | - | 78,374,624 | 75,574,944 | 726,857 | - | 76,301,801 | 2,072,823 |
| பண்டகசாலை உபகரணம் | 49,955,807 | 196,750 | - | 50,152,557 | 49,588,546 | 19,675 | - | 49,608,221 | 544,336 |
| கருவிகளும் உபகரணங்களும் | 45,494,529 | 8,273,546 | - | 53,768,075 | 44,657,321 | 385,218 | - | 45,042,539 | 8,725,536 |
| **மொத்தம்** | **1,626,052,519** | **60,155,726** | **12,082,000** | **1,674,126,245** | **515,535,139** | **28,505,697** | **3,181,400** | **540,859,436** | **1,133,266,809** |

## கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

**டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

**(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாய்களில்)**

**குறிப்பு 07 - நிதிச் செலவு**

| | | |
|---|---|---|
| பற்று வரி | 70,078 | - |
| வங்கிக் கட்டணங்கள் | 714,767 | - |
| குத்தகை வட்டி | 583,566 | - |
| குத்தகையிடல் ஏனைய செலவுகள் | 142,584 | - |
| மக்கள் வங்கி கடன் மீதான வட்டி | 21,000,000 | 21,000,000 |
| **மொத்தம்** | **22,510,995** | **21,000,000** |

| | | |
|---|---|---|
| **முறி வட்டி கட்டணங்கள்** | **323,812,668** | **323,812,668** |

**குறிப்பு 08 - விதிவிலக்கான விடயங்கள்**

| | | |
|---|---|---|
| கொள்வனவு உடன்படிக்கையின் வாசகம் 6.2(ஈ) இன்படி மறுசீரமைப்பு கொடுக்கல் வாங்கலினை செய்ததன் பின்னர் சதொச சில்லறை லிமிட்டெட்டுடனான 2003.12.31 இலுள்ளவாறான கூ.மொ.தாபனத்தின் நடைமுறைக் கணக்கு மீதி | - | 381,412,591 |
| **மொத்தம்** | - | **381,412,591** |

## கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

**டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது**

**(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாய்களில்)**

**குறிப்பு 10 - முதலீடு**

| | | |
|---|---|---|
| சதொச மோட்டேர்ஸ் லிமிடெட் | 10 | 10 |
| இன்கிறின் இன்ஸ்ரிரியூட் ஒவ் பிறின்ரிங் அன்ட் கிராபிக்ஸ் | 9,923,710 | 9,923,710 |
| சதொச சில்லறை லிமிட்டெட் | 171,928,690 | 171,928,690 |
| மொத்தம் | **181,852,410** | **181,852,410** |

**இன்கிறின் இன்ஸ்ரிரியூட் ஒவ் பிறின்ரிங் அன்ட் கிராபிக்ஸ்**

சதொச பிறின்ரேஸ் 1996 ஏப்ரல் இறுதியில் கலைப்புச் செய்யப்பட்டது. சதொச பிறின்ரேஸின் அனைத்து உபகரணங்களும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் இராணுவத்திற்கு வழங்கப்பட்டது. (ஏற்றுமதி அபிவிருத்திச் சபையானது அமைச்சின் வழிகாட்டுதல்களின் கீழ் இன்கிறின் நிறுவகத்திற்கான ஊக்குவிப்பாளராகும்.)

(iv) கணக்காய்விற்கு முதலில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2011 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சுழற்சி நிதியத்தின் விற்பனைகள் மற்றும் இறுதியிருப்பிற்கிடையே ரூபா 28 மில்லியனும், சுழற்சி நிதியத்தின் கொள்வனவுகள் மற்றும் ஆரம்ப இருப்பிற்கிடையே 64 மில்லியனுமாக ரூபா 92 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்த வேறுபாடொன்றினால் இலாபத்தில் ரூபா 36 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் அவ் வேறுபாட்டிற்குரிய நாட்குறிப்புப் பதிவு / செம்மையாக்கல் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் சுழற்சி நிதியத்தின் விளைவு மற்றும் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் உண்மையானவை என உறதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) வியாபாரப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு 2006 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட ரூபா 275 மில்லியன் தொகையான கடனை மீளச் செலுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், அதனை மீளச் செலுத்த வேண்டிய கடனாக காண்பிப்பதற்குப் பதிலாக மீளமைப்பு ஒதுக்கத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) லங்கா சதொச கம்பனியிடமிருந்து வருடாந்த வாடகை மற்றும் தேசநில அனுமதிப்பத்திர கட்டணமாக பெறவேண்டிய ரூபா 71,561,640 நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

CHECKED
RE Division
Tha

(ஈ) வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதியினுள் ரூபா 279,102,257 ஆன அசாதாரண செலவு மீதியொன்றும், கடன்கொடுத்தோர் மீதியினுள் ரூபா 38,825,045 ஆன அசாதாரண வரவு மீதியொன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இவ் அசாதாரண மீதிகளை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்குப்பதிலாக ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு பெறவேண்டிய தேறிய தொகையான ரூபா 240,277,212 இனை காண்பித்தமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் உண்மைத்தன்மை வெளிப்படுத்தப்படவில்லை.

(உ) ரூபா 80,282,250 கிரயமான சொத்துக்களுக்கான மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,068,232 ஆன பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்காததுடன், கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் படி ரூபா 16,911,000 கிரயமான முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த வாகனங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ரூபா 12,082,000 ஆன கொள்வனவுப் பெறுமதியுடைய 21 வாகனங்கள் தாபனத்தினால் ஆண்டினுள் விற்பனை செய்யப்பட்டிருந்ததெனினும் வாகன விற்பனை இலாபத்தினை கணிப்பீடு செய்யும் போது இரு வாகனங்களுக்குரிய திரண்ட பெறுமானத்தேய்வு மாத்திரம் சீராக்கம் செய்யப்பட்டிருந்தமையினால் விற்பனையிலான நட்டமானது சரியாகக் கணக்கிடப்படாதிருந்தது.

(எ) கடந்த வருடத்தில் கடன்பட்டோராக நிலவிய ரூபா 346,110,167 ஆன மீதி மீளாய்வாண்டின் இறுதியில் தொடர்ந்தும் கடன்பட்டோராக காண்பிக்கப்படுவதாக கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லையெனினும் அக்கடன்பட்டோர் தொடர்பில் மீளாய்வாண்டினுள் ரூபா 200,823,844 ஆன ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் தேறிய கடன்பட்டோர் மீதி அத்தொகையினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய ரூபா 2,360,907 ஆன போக்குவரத்துப் பிரிவிற்குரிய இருப்புக்கள் பௌதீக ரீதியில் இல்லாதிருந்தமையால் இருப்பிலிருந்து நீக்கப்பட்டதெனினும் நட்டமானது வருமானக் கணக்கில் பதிவழிக்கப்படாதிருந்தது. மேலும் இவ் இருப்புக் குறைவு தொடர்பில் முகாமைத்துவமானது இதுவரையில் நடவடிக்கையெடுத்திருக்கவில்லை.

CHECKED
RE Division

(ஐ) 2011 திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமான ரூபா 9,619,007 தொடர்பில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கூட்டுறவு சுழற்சி நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் சேமிப்புக் கணக்கிலிருந்து மீளாய்வாண்டினுள் பெறப்பட்ட ரூபா 3,130,908 ஆன வட்டியானது வருமானக் கூற்றில் தாபனம் ஈட்டிய ஏனைய வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற வாடகைக் கடன்பட்டோரில் கீழ்வரும் அசாதாரண நிலைமைகள் அவதானிக்கப்பட்டமையால் கடன்பட்டோர் மீதி தொடர்பில் கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

(i) 2011 திசெம்பர் 31 இல் வாடகைக் கடன்பட்டோர் ரூபா 47,680,654 ஆக இருந்ததுடன் ஐயக்கடன் ஏற்பாடானது ரூபா 68,539,508 ஆன 144 சதவீத அசாதாரணமான வீதத்தைக் கொண்டிருந்தது. அதன் பிரகாரம் கடன்பட்டோர், மீதியினை விஞ்சி ரூபா 20,858,854 ஆன ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ii) வாடகைக் கடன்பட்டோரின் முன்னைய வருடத்தில் நிலவிய மீதியானது ரூபா 76,871,289 ஆல் குறைவடைந்திருந்ததெனினும் அது இடம்பெற்றது கடன் மீளப்பெறுதலிலான அறவிடமுடியாக் கடனினை பதிவழித்தமையினாலா அல்லது வேறு காரணமொன்றினாலா என்பதை உறுதிப்படுத்தும் பேரேட்டுப் பதிவொன்றோ அல்லது வேறு சான்றொன்றோ கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வாடகை வருமானத்தினுள் மின்சாரப் பட்டியல்கள், நீர் பட்டியல்கள் மற்றும் வேறு கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தமையால், வாடகைக் கடன்பட்டோர் மீதியின் செம்மைத்தன்மை தொடர்பில் திருப்தியடைய முடியாதிருந்தது.

(ஔ) நெல்லினை அரிசியாக்கும் செயற்திட்டத்திற்காக தாபனத்தினால் செய்யப்பட்ட போக்குவரத்துச் செலவினம் ரூபா 7,785,329 , நெல் குத்தல் கட்டணமான ரூபா 15,117,351 மற்றும் பொலிசெக் உறை கொள்வனவுச் செலவினமான ரூபா 2,491,305 உம் தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானமொன்றாயினும் அது விற்பனைச் செலவின் நேரடிக் கிரயமொன்றாக இரட்டைப் பதிவு கோட்பாட்டிற்கு

CHECKED
RE D...

முரணாக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் முரண்பாடான தன்மையொன்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஏப்ரல் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதிகள் மற்றும் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகள் வேறுபட்டிருந்ததுடன் அதற்கான காரணங்கள் முன்வைக்கப்படாதிருந்ததுடன் இருபத்தினான்கு கணக்கு விடயங்களின் கூட்டுத்தொகையான ரூபா 15,903,461,552 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக கூட்டுறவு சுழற்சி நிதியத்தின் நட்டத்திலும் ரூபா 35,919,947 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்டுள்ள சீராக்கல்கள் தொடர்பில் கணக்காய்விற்கு நம்பிக்கை கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினுள் சேர்த்தல்களாக விரிவான பட்டோலையினுள் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 250,266 கிரயமான சொத்துக்கள் மீளாய்வாண்டின் ஆரம்பத்திகதியில் மற்றும் 2011 திசெம்பர் 31 இல் திரண்ட பெறுமானத் தேய்வின் கீழ்க் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இக் கொள்வனவுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு வெளிப்பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட ரூபா 250,266 ஆன சேர்த்தல்களில் வருடத்தினுள் அகற்றப்பட்ட ரூபா 45,500 சீராக்கல்கள் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் ரூபா 204,766 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஏனைய கடன் கொடுத்தோரினுள் ரீஆர் கடனாக வணிக வங்கியொன்றின் பேரில் ரூபா 207,050,943 குறிப்பிடப்பட்டிருந்ததுடன் வங்கி மீதியினை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் அக் கடன் மீதியானது ரூபா 207,097,942 ஆனமையால் ரூபா 46,999 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அக் கடிதத்தின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் ரூபா 21,197,751 ஆன செலுத்த வேண்டிய கட்டணமொன்று தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந் நிதிச் செலவினம் மீளாய்வாண்டில் கணக்குகளில் சீராக்கப்படாதிருந்தது.

CHECKED
RE Division

(ஈ) 2011 ஆம் ஆண்டினுள் ரூபா 242.5 மில்லியன் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன் திட்டமொன்றின்றி அதன் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டமையால் சுழற்சி நிதியத்தினால் மேற்கொள்ள முடியாத ரூபா 35.7 மில்லியனான செயற்பாட்டுக் கிரயமொன்றினை மேற்கொண்டிருந்தமையினால் நிதியத்தின் வங்கிக் கணக்கிலிருந்து ரூபா 104. 2 மில்லியன் தாபனத்தின் சேமிப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டமையும், கூட்டுறவு சுழற்சி நிதியத்தின் பணமானது கூட்டுறவு மொத்த வியாபார தாபனத்தால் உபயோகப்பட்டிருந்தமையும் கூட்டுறவு சுழற்சி நிதியத்தின் ரூபா 72.4 மில்லியன் ஆன நட்டமொன்றினைப் பெற்றமைக்கு காரணமாக அமைந்ததென கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதிருந்தது.

(உ) காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவையாகக் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,730,281 ஆன பெறுமதியுடைய மீதிக்குரிய பேரேட்டிலிருந்த வங்கிக் கணக்கிற்குரிய பதிவுகள் தொடர்பிலான கணக்காய்வுப் பரிசோதனையின் போது வங்கிக் கணக்கின் வரவுப் பக்கத்தில் ரூபா 6,842,728 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 2,342,123,613 கூட்டுத்தொகையான 12 சொத்துக்களின் கணக்கு மீதிகளும், ரூபா 1,601,578,520 கூட்டுத்தொகையான 08 பொறுப்புக்களின் கணக்கு மீதிகளும், ரூபா 139,690,713 தொகையான இரண்டு வருமானக் கணக்கு மீதிகளும், ரூபா 542,164,547 ஆன உரிமையாண்மைக் கணக்கு மீதியுமாக ரூபா 4,625,557,393 மொத்தக் கூட்டுத்தொகை தொடர்பில் சான்றுகளின்மையால் அவ் விடயங்களை திருப்திகரமாக சான்றுபடுத்துவதற்குப் அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) நடைமுறைப் பொறுப்பின் கீழ் செலுத்த வேண்டிய பெறுமதியாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 110,975,798 கூட்டுத்தொகையான 09 கணக்கு மீதிகளை சரியாக இனங்காண்பதற்கு முகாமைத்துவமானது கணக்காய்வுத் திகதி வரையிலும் தவறியிருந்தது.

CHECKED
RE Division

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) ஆம் பிரிவு | நிதிக்கூற்றுக்களுடன் கணக்குகள் பற்றிய அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டத்தின் 2 மற்றும் 8 ஆம் பிரிவுகள் | ரூபா 5,000,000 இனை விஞ்சும் சகல பொது ஒப்பந்தங்களும் இப் பிரிவின் பிரகாரம் கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டுமாயினும் தாபனம் மானியமளிக்கப்பட்டிருந்த ரூபா 40,146,175 கூட்டுத்தொகையான 05 ஒப்பந்தங்கள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1991 இன் 31 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த வியாபார தாபன (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 2.2 (அ) ஆம் பிரிவு | தாபனத்திற்கு முதலீடு செய்ய இயலுமானது பொதுக் கம்பனியில் மட்டுமே, எனினும், அதற்கு முரணாகவும் அமைச்சரவையின் அல்லது திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதியின்றியும் வரையறுக்கப்பட்ட சசொத பொருளாதார நிலைய சேவைகள் தனியார் கம்பனி எனும் பெயரில் தனியார் நிறுவனமொன்றினை நிறுவி தாபனத்தில் வேதனம் பெறும் உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |



CHECKED
RE Division

## 2.2.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெலிசர களஞ்சிய கட்டிடத் தொகுதியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த லக் சதொசவிற்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 126,156,746 கூட்டுத்தொகையான சொத்துக்களுக்காக எதுவித பணமும் 2014 ஒக்தோபர் மாதமளவிலும் பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அப் பணம் நிலையான சொத்துக்களினுள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கு அல்லது கணக்கு வைக்கப்பட்டுள்ள முறைமையை நிச்சயப்படுத்துவதற்கு தாபனம் தங்கியிருந்தது.

(ஆ) 2011 திசெம்பர் 31 ஆம் திகதியின் போது நிறுவனங்கள் மற்றும் 145 தனிநபர்களிடமிருந்து தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட பழமையான வாடகை வருமானம் ரூபா 87,560,470 ஆக இருந்ததுடன், இத் தொகையினை அறவிடுவதற்கு போதிளவு நடவடிக்கைகள் 2014 ஒக்தோபர் இறுதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2009 ஆம் வருடத்திலிருந்து பெற வேண்டியதாக இருந்த ரூபா 47.6 மில்லியன் குத்தகை வாடகை வருமானத்தினை அறவிடுவதற்கு தாபனம் தவறியிருந்தது.

(இ) 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் அரிசி மற்றும் கோதுமை மாவினை இறக்குமதி செய்வதன் பொருட்டு திறைசேரியின் பிணைகளின் அடிப்படையில் அரச வங்கியொன்றிடமிருந்து தாபனத்திற்கு கேள்விப் பிணைக் கடனாக ரூபா 207,050,943 வழங்கப்பட்டிருந்ததுடன், அது 2014 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்படாது காணப்பட்டது.

(ஈ) சதொசாவினால் நெல் விற்பனைச் சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 341,388,591 ஆன மீதியொன்று நிலவுவதாக நெல் விற்பனைச் சபையின் 2011 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததெனினும், சதொசாவின் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 95,931,317 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இப் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு இது வரையில் தாபனம் தவறியிருந்ததுடன் இவ் வேறுபாட்டினை சீராக்கம் செய்வதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.



CHECKED
RE Division

| | | |
|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 8.2.3 ஆம் பிரிவு | நிதி அமைச்சின் இணக்கப்பாடின்றி தாபனத்தால் நிறுவப்பட்ட தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 5,124,018 ஆன தொகை வழங்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2009 யூன் 01 ஆம் திகதிய 30 ஆம் இலக்க மற்றும் 2009 மே 26 ஆம் திகதிய 39 ஆம் இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பில் மற்றும் அரச வேதனம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான பிரமாணங்கள் மற்றும் நியமங்கள் பற்றி கவனத்திற்கொள்ளாமல் 65 ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு உரிய அங்கீகாரமின்றி பதவியுயர்வு வழங்கப்பட்டு பல்வேறு சம்பள அளவுகளில் அமர்த்தப்பட்டிருந்தனர். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட வருமானக் கூற்றின் பிரகாரம், மீளாய்வாண்டின் தேறிய நட்டமானது ரூபா 313,605,785 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 321,512,555 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் ரூபா 7,906,770 இனால் தேறிய நட்டமானது குறைவடைந்திருந்தது. எனினும், கூட்டுறவு சுழற்சி நிதியத்தின் மற்றும் தாபனத்தின் விற்பனைகளை குறிப்பாக இனங்கண்டு வெவ்வேறாக கணக்கு வைக்காமையினால் முன்னைய ஆண்டின் இறுதியிருப்பானது மீளாய்வாண்டின் ஆரம்ப இருப்பாக ரூபா 79,297,166 ஆன தொகையினால் குறைத்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு செல்லப்பட்டமையால் ரூபா 26,558,554 ஆன நிகர நட்டமாக மாற்றப்பட்டமையால் (கணக்காய்வினால் செயற்பாட்டு மற்றும் நிதிச் செலவுகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவதானிப்புக்களின் தாக்கங்களைப் புறக்கணித்து) குறைந்த பட்சம் தேறிய நட்டமானது ரூபா 69,090,283 ஆக இருக்க வேண்டியமையால் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 344 சதவீதமான அதிகரிப்பு 3104 சதவீத வீழ்ச்சியொன்றாக மாற்றப்படுகின்றது.



CHECKED
RE Division

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

| | | 2011 | 2012 |
|---|---|---|---|
| (i) | இலாப விகிதம் | | |
| | - மொத்த இலாபம் சதவீதமாக | 17 | 01 |
| | - செயற்பாட்டு இலாபம் சதவீதமாக | 10 | 13 |
| | - தேறிய இலாபம் சதவீதமாக | 03 | 01 |
| (ii) | செயற்பாட்டு வருமானத்திற்கு செயற்பாட்டு செலவினங்கள் விகிதம் சதவீதமாக | 41 | 46 |
| (iii) | திரவ விகிதம் | | |
| | - நடைமுறை | 0.66 : 01 | 0.47 : 01 |
| | - விரைவுச் சொத்து | 0.58 : 01 | 0.39 : 01 |
| (iv) | இருப்பு புரள்வு விகிதம் | 3.71 | 2:37 |
| (v) | ஆளணி செலவின விற்பனை விகிதம் | 1:3 | 1:2 |
| (vi) | மொத்த சொத்துக்களுக்கு தேறிய சொத்துக்களின் விகிதம் | (2.82) | (3.23) |
| (vii) | மூலதன இணைவு விகிதம் | (1) : 1.1 | (1) : 1.1 |
| (viii) | திரவ விகிதம் | (47%) | (52%) |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய இவ்வறிக்கையில் காணப்படுகின்ற 2.2.3 மற்றும் 2.2.5 என்பவற்றின் அவதானிப்புக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் கணக்கு மீதிகளிற்கு சமர்ப்பிக்கப்பட்ட கடந்த வருடத்தின் இணக்கம் செய்யப்பட்ட மீதிகளுக்கிடையேயும் காணப்படுகின்ற இணக்கமின்மை காரணமாக மேற்குறிப்பிட்ட விகிதம் பகுப்பாய்வு மூலம் பகுப்பாய்வொன்று செய்யப்படின் அதனை பயனுள்ளதாக கணக்காய்விற்கு ஈடுபடுத்திக்கொள்வதில் பல சிரமங்கள் உருவாகியிருந்தன.

CHECKED
RE Division

(ஆ) முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் பதவியணிச் செலவுகளுக்கு விற்பனை விகிதமானது முறையே 1:2 மற்றும் 1:3 ஆக காணப்பட்டமையால் மொத்த விற்பனை வருமானத்தில் ½ மற்றும் 1/3 எனுப்படியாக மிக அதிகமான பதவியணி செலவினமொன்று தாபனத்தினால் ஏற்கப்பட்டிருந்தது.

(இ) தாபனத்தின் மூலதன இணைவு விகிதத்தினை கடந்த வருடம் மற்றும் மீளாய்வாண்டு ஆகியவற்றுடன் இணக்கம் செய்யும் போது வருடந்தோறும் மூலதனம் குறைவடைவதன் காரணத்தால் உயர் இணைவு நிலைமையொன்று ஏற்பட்டு தாபனத்தின் மூலதனக் கட்டமைப்பானது எச்சரிக்கைக்குள்ளாகிக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே தாபனத்தின் மூலதன குறைவின் காரணமாக திரவ வீழ்ச்சியின் எல்லையானது 47 சதவீதத்திற்கும் 52 சதவீதத்திற்கும் இடைப்பட்டிருந்தது.

(ஈ) மொத்தச் சொத்துக்களின் பெறுமதியில் 3 மடங்கு எனும் படி தேறிய சொத்துக்கள் (உரிமை மூலதனம்) மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்திட்டத்தில் காணப்படுகின்ற 2011 ஆம் ஆண்டின் செயற்திறனின் பிரகாரம், அரிசியினை தயார்ப்படுத்துவதற்கு செலவிட உத்தேசித்துள்ள காலமானது 4,608 மணித்தியாலங்கள் எனினும் உண்மையாக செலவிட்ட காலமானது 3,561 மணித்தியாலங்களாகும். எவ்வாறாயினும் கடமைப்புரிந்த 3,561 மணித்தியாலங்களுக்காக கொள்வனவு செய்ய வேண்டிய நெல்லின் அளவானது 4,006,125 கிலோ கிராம்களாகுமெனினும் (1500 X 75%/ X 3,561) உண்மையாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது 3,506,083 கிலோ கிராம்களானமையால் 500,042 கிலோ கிராம் நெல்லானது குறைவாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆகையால் தாபனத்தின் அரிசி ஆலையின் முகாமைத்துவச் செயற்பாடுகள் நலிவான மட்டத்தில் நிலவின.



CHECKED
RE Division
Tha

(ஆ) கொள்வனவு செய்யப்பட்ட நெல்லில் அரிசியாக்கக் கூடியதாக நியாயமாக்கப்பட்ட அளவானது 2,349,075 கி.கி (3,506,083 x 67% ) ஆனமையால் உண்மையாக 2,230,400 கி.கி அரிசியே இருந்தது. அதன் பிரகாரம் 118,675 கி.கி அரிசி குறைவாக உற்பத்தியாகியிருந்தமை அசாதாரண நிலையொன்றாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) அரிசி தயார்படுத்தும் செயற்பாடுகளுக்காக நெல் சந்தைப்படுத்தல் சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நெல்லின் அளவு தொடர்பில் இலக்கிடப்பட்ட கூட்டுத்திட்டத்தில் அல்லது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லையெனினும், நெல் சந்தைப்படுத்தல் சபையிடமிருந்து 5,942.104 மெற்றிக் தொன் நெல்லானது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 5,097,455 பெறுமதியான 12 "கொள்கலன் இயந்திரங்களின்" மின் மோட்டார்கள் தொலைந்து போனமை தொடர்பில் சொத்துக்களைக் கையேற்றல், பொறுப்புக்களைக் கையளித்தல் தொடர்பான உறுதிப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை இனங்கண்டு அவர்களுக்கெதிராக சட்டரீதியான நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பஜட் சொப்களை நடாத்திச் செல்வதற்காக தாபனத்திற்குச் சொந்தமாக 05 கட்டிடங்களை வாடகைக்கு வழங்கும் போது உரிய தரப்பினருடன் முறையாக சட்டரீதியான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், அரச மதிப்பீட்டாளர்களிடமிருந்து மதிப்பீடொன்று பெறப்பட்டு வாடகையினை தீர்மானிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தாபனத்திற்குச் சொந்தமான விற்பனை நிலையங்கள் மற்றும் 29 களஞ்சியக் கட்டிடங்களின் வாடகை தொடர்பில் அரச மதிப்பீட்டாளரொருவரினால் மதிப்பீடு செய்யாது அரச நிறுவனமொன்றான வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.



CHECKED
RE Division

(ஈ) 2010 நவம்பர் 03 ஆம் திகதியளவில் தாபனத்திற்குரிய ரூபா 51,718,227 கூட்டுத்தொகையான சொத்துக்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பொருட்டு பணம் பெற்றுக்கொள்ளவோ கம்பனியின் பங்குகளை பெற்றுக்கொள்ளவோ முறையான ஒருங்கிணைப்பாடொன்றுக்கு வந்திருக்கவில்லை.

(உ) கூட்டுறவு சுழற்சி நிதியத்தின் கணக்கிலிருந்து ரூபா 14.9 மில்லியன் தொகையும் கூட்டுறவு ஆணையாளரிடமிருந்து நேரடியாக பெறப்பட்ட ரூபா 30 மில்லியன் தொகையும் கூட்டுறவு மொத்த வியாபார தாபனத்தின் மேவுகை செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால், சுழற்சி நிதியத்திலிருந்து பெறப்பட்ட பணமானது சுழற்சி நிதியத்தின் நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது புறக்கணிக்கு முடியாதிருந்தது.

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாபனத்தினால் சதொச சில்லறைக் கம்பனியிலும் மற்றும் இன்கிரீன் இன்ஸ்டிடியூட் ஒவ் பிரிவின் என்ட் கிரபிக்ஸ் கம்பனியிலும் முறையே ரூபா 171,928,690 மற்றும் ரூபா 9,923,710 எனும் ரீதியில் ரூபா 181,852,400 கூட்டுத்தொகையான நிதி 1999 ஆம் ஆண்டின் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதில் சதொச சில்லறைக் கம்பனி நட்டமேற்பட்டமையால் 2005 யூன் மாதம் முதல் நலிவான நிலையில் காணப்பட்டாலும் 2006 ஒக்தோபர் 23 ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் அதகை கலைப்பதற்குப் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் முதலீடு செய்யப்பட்ட பணத்தினை மீளப்பெறுதல் நிச்சயமற்றதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இன்கிரீன் இன்சிடியூட் ஒவ் பிரின்டின் என்ட் கிரபிக்ஸ் கம்பனியிடமும் உரிய முதலீட்டிற்காக 1999 முதல் 2011 வரையான காலப்பகுதிக்கு எதுவித இலாபப் பங்கும் தபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. சதொசாவினால் சதொச சில்லறை கம்பனியில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடு உள்ளடங்களாக அக்க கம்பனியிடமிருந்து சதொசாவிற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 534 மில்லியன் கூட்டுத்தொகையான பணத்திற்காக ரூபா 42 மில்லியன் மாத்திரம் 2013 யூன் 07 ஆம் திகதி தாபனத்திற்கு பெறப்பட்டிருந்ததாக நிதிக்கூற்றுக்களின் படி காண்பிக்கப்பட்டிருந்தது.

CHECKED
RE Division

(ஆ) தாபனத்தின் வருடாந்த பாதீட்டின் மூலம் உபசரிப்புச் செலவுகளுக்காக ரூபா 134,000 ஒதுக்கப்பட்டிருந்ததெனினும் உபசரிப்புச் செலவுகளுக்காக ரூபா 1,494,791 செலவிடப்பட்டிருந்தது.

## 4.4 மீள்கட்டமைப்புக் கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

2003 ஆம் ஆண்டில் தாபனத்தின் மீள் கட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2003 திசெம்பர் 01 இல் உள்ளவாறு 06 வணிக வங்கிகளுக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 5,493 மில்லியன் கடன் தொகையில் ரூபா 4,397 மில்லியனைச் செலுத்தி தீர்ப்பதற்கு வணிக வங்கிகளை உடன்படச் செய்து அதற்காக 13 வருடங்களில் முதிர்வடையும் திறைசேரி பிணைகள் உரிய வணிக வங்கிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. அத் திறைசேரி பிணைகள் தாபனத்திற்குரிய சொத்துக்களில் ரூபா 1.8 பில்லியன் பெறுமதியான சொத்துக்களை பொது முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் மூலம் விற்பனை செய்து பெறப்படும் தொகையில் 2005 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்வதற்கும், அப் பிணைக்கடன் தொடர்பில் அரையாண்டு வட்டி செலுத்துவதற்கும், செலுத்த வேண்டிய வட்டியிலில் 50 சதவீதம் திறைசேரியினால் ஏற்றுக்கொள்வதற்கும் எஞ்சிய 50 சதவீதமானது சதொசாவிற்கு உரித்துடைய சொத்துக்களை சதொச ரீடெயில் கம்பனிக்கு வாடகைக்கு வழங்குவதன் மூலம் பெறப்படுகின்ற வருமானத்தில் செலுத்துவதற்கும் உடன்பட்டிருந்ததெனினும், மீள் கட்டமைப்பின் கீழ் திறைசேரி பிணைகளுக்கான பொறுப்புக்களை தீர்ப்பதற்கு பொது முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொத்துக்கள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், 2004 பெப்ரவரி 03 ஆம் திகதிய 04/0103/136/007/EPC/710 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தாபனத்தை கலைப்பதற்கும் தனியார் மயப்படுத்துவதற்குமாக எடுக்கப்பட்ட தீர்மானம் 2004 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 04/0892/012/001 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிறுத்தப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் இறுதிப்பெறுமதி ரூபா 4,397 மில்லியன் கொண்ட திறைசேரி பிணைகள் 8.5 சதவீத கழிவின் அடிப்படையில் அப் பிணைகளின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேறிய இற்றைப் பெறுமதியான ரூபா 2,924 மில்லியனையும், ரூபா 1,472 மில்லியன் கழிவுப் பெறுமதியையும் ஒன்றிணைப்பதன் மூலம் பெறப்பட்ட அந்த ரூபா 4,397 மில்லியன் இறுதிப் பெறுமதிக்கு, கடன் தொகையினை தீர்ப்பனவு செய்வதற்குப் பதிலாக சதொச ரீடெயில் கம்பனியின் கடன்பட்டோர் மற்றும் மேற்படி 06 வங்கிகளிற்கிடையே 03 வணிக வங்கிகளுக்கு மேலும் திறைசேரியினால் செலுத்தப்பட்ட



CHECKED
RE Division

பெறுமதிக்குப் பதிலாக திறைசேரிக்கு செலுத்த வேண்டிய ரூபா 200 மில்லியனுடன் (4,397+200) ரூபா 4,597 மில்லியன் கூட்டுத்தொகையான பிணைகள் பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

இதற்குரியதாக திறைசேரிக்கு செலுத் வேண்டிய பிணை முறி வட்டிப் பொறுப்பான ரூபா 2,482,355,130 பெறுமதியானது "பிணை முறி வட்டிக்கான திறைசேரி மானியம்" எனும் பெயரில் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

மேலும் இச் செலுத்த வேண்டிய ரூபா 4,597 மில்லியனில் ரூபா 200 மில்லியனான மீதியானது திறைசேரிக்கு பெறவேண்டிய பெறுமதியா என்பது தொடர்பில் திறைசேரியினால் உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முகாமைத்துவம் தவறியிருந்ததுடன் ஏனைய கடன்பட்டோரின் கீழ் மீள் கட்டமைப்பாக ரூபா 66,363,460 ஆன தொகை காண்பிக்கப்பட்டிருந்தமையால் மீள் கட்டமைப்புச் செய்தலின் கொடுக்கல் வாங்கல்கள் முறையாக வெளிப்படுத்தப்பட்டோ அல்லது சீராக்கம் செய்யப்பட்டோ இன்மை தெளிவாகின்றது. இம் மீள்கட்டமைப்புப் பெறுமதியான ரூபா 66 மில்லியனானது கணனி கணக்கு முறைமையில் புத்தக வைப்பாகவே காண்பிக்கப்பட்டிருந்தது.

**4.5 தெளிவான மோசடியான கொடுக்கல் வாங்கல்கள்**

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற வெதுப்பக உற்பத்தி சந்தைப்படுத்தலின் போது ரூபா 1,321,285 கூட்டுத்தொகையான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததெனினும், அதற்குரிய சட்ட நடவடிக்கைகள் 2015 ஏப்ரல் 30 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.6 நிகழத்தக்க பொறுப்புக்கள்**

2011 ஆம் ஆண்டில் இறுதியில் தாபனத்திற்கெதிராக பல்வேறு தரப்பினரால் 59 வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்ததுடன், நிதிக்கூற்றுக்களில் அவை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

வாடகை அடிப்படையில் பெறப்பட்ட உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குரிய ஹிங்குரான்கொடயிலுள்ள 2 மா களஞ்சியங்களில் ரூபா 78,978,504 ஆன தொகை செலவில் அரிசி ஆலைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.



CHECKED
RE Division

### 4.8 செயற்பாடற்ற சொத்துக்கள்

2006 செப்தெம்பர் மாதத்தில் வரிசை அமைச்சின் ஆலோசனையின் அடிப்படையில் தாபனத்தால் ரூபா 14,501,998 பெறுமதியான அரிசி தயாரிக்கும் 140 இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் அரிசி தயாரிக்கும் இயந்திரங்களினை பாவனைக்குட்படுத்த தாபனம் நடவடிக்கை மேற்கொண்டிராததுடன் 2014 நவம்பர் வரையிலும் இவ் இயந்திரங்கள் தாபனத்தினுள் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து அதற்கடுத்த வருடத்தின் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், 2011 ஆம் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 11 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் அவை மீளப்பெறப்பட்டு மீள் திருத்தப்பட்ட புதிய நிதிக்கூற்றுக்களாக 2014 யூன் 09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) கூட்டுறவு சுழற்சி நிதியத்தின் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் தாபனத்தின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் ஒன்றாக கோவைப்படுத்தப்பட்டிருந்தமையால், தாபனத்தின் வருமான செலவினங்களில் கூட்டுறவு சுழற்சி நிதியத்தின் வருமான செலவினங்களை தனித்து இனங்காணக்கூடிய முறையில் தெளிவான பேரேட்டுக் கணக்குகள் பேணப்படாமையால் இக் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படையான தன்மையுடன் மேற்கொள்ளப்பட்டனவா என்பது தொடர்பில் சிக்கல்கள் காணப்பட்டன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் தாபனத்தின் காட்சிப்படுத்தல் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2011 முதல் 2013 வரை உள்ளடங்கும் வகையில் கூட்டிணைந்த



CHECKED
RE DIVI

திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததெனினும் அது காலத்தினடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயற்பாட்டுத் திட்டம்

2011 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு திட்டமொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததெனினும் அது 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 142 ஆம் இலக்க அரச பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான பெறுமதிகளுக்கிடையே, 53 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான குறிப்பிடத்தக்க முரணொன்று அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்கு காலம் தாபனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. அதன் பிரகாரம் பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) வாடகை வருமானம்
(உ) பதவியணியினர் முகாமைத்துவம்
(ஊ) உள்ளகக் கணக்காய்வு

ஒப்பம் : டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

*k/y*

CHECKED RE DIVISION

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) (இ) பிரிவின் நியதிகளின்படி 2011.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இது, 2015, ஜூலை 17 ஆம் திகதிய ரிசி/டீ/சீடப்ளஈ/1/11 சமவிலக்கத்தினைக் கொண்ட கடிதம் தொடர்பானது. மேற்குறித்த அறிக்கை தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள எமது அவதானங்கள் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகின்றன.

தலைவரின் கருத்துரை

1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான முகாமைத்துவ பொறுப்புடமை

1.3 கணக்காய்வுக்கான பொறுப்புடமை

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 கணக்காய்வு அபிப்பிராயம்

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரை

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இகநி)

(அ) இகநி 03 :- உடன்படுகின்றோம். 2012 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றினை உரிய கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) இகநி 03 :- சரக்கிருப்புக்களினை அங்கீகரிப்பது தொடர்பில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை, கணக்குகளில் பதிவு செய்தல் மற்றும் வெளிப்படுத்துதல் என்பன 09 ஆம் பக்கத்திலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளின் 'சரக்கிருப்புக்களின்' கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

(இ) இகநி 09 :- 2.2.2 2014.09.2014 ஆம் திகதிய TC/D/CWE/FA/AQ/2011/2014 ஆம் இலக்க திருத்தப்பட்ட நிதிக் கணக்காய்வின் 2011 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு வினாவின் 01 ஆம் இலக்கத்தின் கீழ் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இந்த வித்தியாசமானது நிதிக் கணக்குகளில் தாக்கத்தினையும் உண்டுபண்ணாததினால் காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதனத்திலுள்ள வேறுபாடு மீது எவ்வித செல்வாக்கினையும் செலுத்தாது.

2.2.3 (இ) நீங்கள் குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பங்களுடன் நாம் இணங்குவதுடன் தொழிற்படு மூலதன வேறுபாட்டின் இறுதி பதிலளிப்பு மீது தாக்கத்தினை ஏற்படுத்தாது என்பதனையும் அறியத்தருகின்றோம். எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் இத்தகைய நிலையினை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2.2.3 (உ) 2014.09.30 ஆம் திகதிய TC/D/CWE/FA/AQ/2011/2014 ஆம் இலக்கத்தின் 04 ஆம் இலக்கத்தின் கீழ் இதற்கான பதில் அளிக்கப்பட்டுள்ளது. ஆகையால், இந்த சூழ்நிலையானது காசுப்பாய்ச்சலின் தொழிற்படு மூலதன வேறுபாட்டினைக் கணிப்பதில் எவ்வித செல்வாக்கினையும் செலுத்தியிருக்கவில்லை.

2.2.3 (ஊ) 2014.09.30 ஆம் திகதிய TC/D/CWE/FA/AQ/2011/2014 கணக்காய்வு வினாவின் கீழ் விடையளிக்கப்பட்டுள்ளது.மேலும், இது தொழிற்படு மூலதன வேறுபாட்டில் இறுதியாக விடையளிக்கப்பட்டதன் மீது எவ்வித தாக்கத்தினையும் எற்படுத்தாது.

2.2.3 (எ) நீங்கள் குறிப்பிட்டுள்ள சூழ்நிலைகளுடன் இணங்குவதுடன் கூடடுறவு மொத்த விற்பனை தாபனமானது இதனைச் சீர் செய்வதற்குத் தேவையான ஆவணம் எதனையும் கொண்டிருக்கவில்லை.

எவ்வாறாயினும், கணக்கீட்டின்படி மூலதன வேறுபாட்டுக் கணிப்பீடானது சரியானதாக இருந்தபோதிலும் நீங்கள் குறிப்பிட்ட சூழ்நிலைகளின் கீழ் கணிப்பிடப்படுகின்ற தொழிற்படு மூலதன வேறுபாடு இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அது தொழிற்படு மூலதனத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துமென்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

(ஈ) இகநி 18 :- (i) மீள் பெறுமதி மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் 2012 ஆம் ஆண்டில் இத்தகைய சொத்துக்களினைச் சமர்ப்பிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(ii) சொத்துக்களின் தேய்மானத்திற்கான ஒதுக்கீட்டில்கொள்வனவு ஆண்டுக்காக கணிப்பிப்படுகின்ற அதேவேளையில் தேய்மானமானது நீக்கப்படுகின்ற முழு ஆண்டுக்கும் கணக்கிடப்படுவதில்லை.மேலும், விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்படுவதுடன் இதுவரையில் மேற்கொள்ள்ப்பட்ட தரண்ட தேய்மானத் தொகையானது நீக்கப்பட்டது. எவ்வாறாயினும், தேய்மானமானது 2010 ஆம் ஆண்டுக்காக புதிதாக கணிப்பீடு செய்யப்பட்டிருக்காமையினால், உரிய தேய்மானமானது 2010 இற்காக கணிப்பீடு செய்யப்பட்டு 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

இதனால், 2012 இல் 2011 ஆம் ஆண்டுக்காக நீங்கள் குறிப்பீடுசெய்துள்ள ரூபா. 41,270,917/- இல் சொத்துக்களின் பெறுமதிக்கான தேய்மானத்தினைக் கணிப்பீடு செய்யுமாறு நான் குறிப்பீடு செய்துள்ளேன்.

| சொத்துக்கள் | வீதாசாரம் | கிரயம் | தேய்மானம் அளிக்கப்பட்ட பெறுமதி | தேய்மானம் அளிக்கப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| கணனிகளும் துணைப் பொருட்களும் | 33 1/3% | 2,104,510/- | 701,434/- | 1 வருடம் |
| துணைப் பொருட்கள் (போக்குவரத்துப் பிரிவு) | 10% | 9,300/- | 930/- | 1 வருடம் |
| துணைப் பொருட்கள் (பொதியிடல் பிரிவு | 10% | 778,141/- | 77,814/- | 1 வருடம் |
| கருவிகள் (கட்டிடப் பகுதி) | 10% | 4,915,960/- | 306,474/- | 1 வருடம் |
| அலுவலக உபகரணம் | 10% | 44,293/- | 4,429/- | 1 வருடம் |
| குளிரூட்டிகளினை நிறுவுதல் | 10% | 416,000/- | 41,600/- | 1 வருடம் |
| குளிரூட்டிகளினை நிறுவுதல் | 10% | 641,725/- | 64,172/- | 1 வருடம் |
| குளிரூட்டிகளினை நிறுவுதல் | 10% | 97,750/- | 9,775/- | 6 மாதங்கள் |
| ஹிங்குராகொட(கிரீஸ் கட்டர்) | 10% | 13,750/- | 1,375/- | 6 மாதங்கள் |
| குளிரூட்டிகளினை நிறுவுதல் | 10% | 789,970/- | 39,498/- | 6 மாதங்கள் |
| குளிரூட்டிகளினை நிறுவுதல் | 10% | 469,975/- | 23,498/- | 6 மாதங்கள் |
| குளிரூட்டிகளினை நிறுவுதல் | 10% | 246,500/- | 12,325/- | 6 மாதங்கள் |
| குளிரூட்டிகளினை நிறுவுதல் | 10% | 330,000/- | 16,500/- | 6 மாதங்கள் |
| குளிரூட்டிகளினை நிறுவுதல் | 10% | 1,287,800/- | 64,390/- | 6 மாதங்கள் |
| குளிரூட்டிகளினை நிறுவுதல் | 10% | 578,197/- | 28,909/- | 6 மாதங்கள் |

கொள்வனவு செய்யும் தளபாடங்களுக்கும் அவற்றினை நிறுவுவதற்கும் தேய்மான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2012 இல் அவற்றிற்கான தேய்மான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. விற்பனை செய்யப்பட்ட வாகனங்களுக்கு 2009 இல் மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவை தேய்மான கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. மேலும், அத்தகைய வாகனங்களுக்கான தேய்மானம் 2011 இல் கணப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய சொத்துக்களின் தேய்மானத்துடன் தொடர்புடைய அட்டவணைகள் எம்மிடம் உள்ளதுடன் அவற்றினைச் சமர்ப்பிக்க முடியும். இத்தகைய விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் 2009 இல் மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவை 2011 இல் விற்பனை செய்யப்பட்டன. இது தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2011 ஆம் ஆண்டுக்கான நிலையான சொத்துக்களின் விரிவான அட்டவணையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

(ஊ) இகநி 26 :- 2012 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

(எ) இகநி 40 :- 2012 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

1.2.2 <u>கணக்கீட்டுக் கொள்கைகள்</u>

விடைகள், 2014.09.30 ஆம் திகதியTC/D/CWE/FA/2011/2014 ஆம் இலக்க மீளாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றினைக் கணக்காய்வு செய்யும் 2011 ஆம் ஆண்டின் கணக்காய்வு வினாவின் இல. 01 இன் கீழ் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், வேறுபாடானது நிதிக் கூற்றுக்களில் தாக்கத்தினை எற்படுத்தாது என்பதால், காசுப் பாய்ச்சல் கூற்றின் தொழிற்படு மூலதன வேறுபாட்டில் எவ்வித செல்வாக்கினையும் செலுத்தாது.

2.2.3 <u>கணக்கீட்டுக் குறைபாடுகள்</u>

(அ) பொதுத் திறைசேரியானது, அரிசி, மா மற்றும் சீனி இறக்குமதிக்கு மக்கள் வங்கியிடமிருந்து கூமொதா பெற்றுக் கொண்ட ரூபா. 456 மில்லியன் கடனிலிருந்து ரூபா. 275 மில்லியன் (மா கொள்வனவின் போது ஏற்படும் நட்டத்தினை மீள் நிதியிடுவதற்காக) தொகையினைப் பெற்றுக் கொண்டது. இது மறுசீரமைக்கப்பட்ட ஒதுக்கங்களின். கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. இது 2012 ஆம் ஆண்டின் ஒதுக்கங்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளதுடன் திரண்ட இலாப / நட்டக் கணக்கு மீதிக்கான சீராக்கல்களினை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) (i) லங்கா சதொசவிற்கு செலுத்தப்பட்ட கட்டிடங்களுக்கான வாடகை, 2011 ஏப்பிரலிலிருந்து கூமொதா இற்கு செலுத்தப்பட்டது.

(ii) கூமொதா இன் இணைக் கம்பனியாக லங்கா சதொச இருப்பதனால் இத்தகைய சொத்துக்களினை பயன்படுத்துவதற்கான வாய்ப்பு அதற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இது 2012 இல் மாத்திரம் கணக்குகளில் பதியப்பட்டுள்ளது.

(இ) தொழிற்படு மூலதனத்தின் தேறிய வெளியீட்டில் எவ்வித தாக்கத்தினையும் ஏற்படுத்தாது என்பதுடன் 2012 இல் இதனை சரி செய்யுமாறு குறித்துரைத்துள்ளேன்.

(ஈ) (i) 2012 ஆம் ஆண்டின் கணக்குகளினூடாக சீர் செய்யுமாறு குறிப்பிட்டுள்ளேன்.

(ii) மற்றும் (iv) இத்தகைய வாகனங்கள் 2009 இல் மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அதுவரையிலான காலப்பகுதிக்கான திரண்ட தேய்மானமானது

2010 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் அறவிடு செய்யப்பட்ட போதிலும், 2010 ஆம் ஆண்டுக்கு தேய்மானம் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அதற்கான தேய்மானத்தினைக் கணிப்பீடு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) 2012 ஆம் ஆண்டின் கணக்குகளினூடாக சீர் செய்யுமாறு குறிப்பிட்டுள்ளேன்.

(உ) TC/D/CWE/FA/AQ/2011/2014 இன் இலக்கம் 04 இன் கீழ் பதிலளிக்கப்பட்டுள்ளது.

(ஊ) TC/D/CWE/FA/AQ/2011/2014 இன் இலக்கம் 05 இன் கீழ் பதிலளிக்கப்பட்டுள்ளது.

(எ) நீங்கள் சமர்ப்பித்துள்ள சூழ்நிலையில் குறைபாடு உள்ளதுடன் அது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் 2010 ஆம் ஆண்டுக்கான ஐயக் கடன்களுக்கான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஏ) இது கணக்கீட்டுக் குறிப்புக்கள் 15 இன் கீழ் காட்டப்பட்டுள்ளன.

(ஐ) TC/D/CWE/FA/AQ/2011/2014 குறிப்புக்களின் கீழ் இதற்கான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. இது பழுது பார்த்தல்கள் மற்றும் பேணுதல் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது.

(ஒ) இது தொடர்பில் கணக்குப் பிரிவில் எவ்வித ஆவணமும் காணப்படவில்லை என்பதுடன் கடந்த காலங்களில் கணக்குகளில் காணப்பட்ட வழுக்களினை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தங்களுக்கு அறியத்தர விரும்புகின்றேன்.மேலும், 2012 ஆம் ஆண்டிலுள்ள கணக்குகளில் 2011 ஆம் ஆண்டுக்குரிய கணக்காய்வு கட்டணங்களுக்கான சீராக்கல்களினை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்டுள்ளேன். நீங்கள் குறிப்பிட்டுள்ள நிலுவைகளிலுள்ள மீதிகளினை பதிவு செய்யும் பொருட்டு தொடர்புடைய விலை விபரப்பட்டியல்கள் தொடர்பான மீதிகள் பற்றிய தகவலினை தயவு செய்து எங்களுக்கு அனுப்பி வைக்கவும்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி, அதன் நடவடிக்கைகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள் கூமொதா இன் நிதிக் கூற்றுக்களில் தரப்பட்டுள்ளன.2012 இல் பிளாஸ்ரிக் கூடைகளின் பெறுமதி தொடர்பான சீராக்கல்களினை மேற்கொள்ளுமாறு குறிப்பீடு செய்துள்ளேன்.

1.2.4 <u>முரண்பாடான கொடுக்கல் வாங்கல்கள்</u>

(அ) இது 1998 இலிருந்த அரசாங்கத்தின் கொள்கைகளுக்கிணங்க அப்போதைய முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பெறுபேறாகும். எவ்வாறாயினும், அரிசி பதனிடும் நிலையமானது தற்போது கூமொதா இன் நிலையான

சொத்தாக இருப்பதுடன் அதன் தொழிற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்து வருகின்றது.

(ஆ) (i) முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது, 2012.01.12 இருந்தவாறான சூழ்நிலைகளின் அடிப்படையில் அமுல்படுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விடயங்களினைக் கவனத்தில் கொண்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் வழிகாட்டுதல்களின் அடிப்படையில் பதவியணியொன்றினை அங்கீகரித்துள்ளது.

(ii) மேலும், ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவிஉயர்வுகள் என்பன அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் . முழுப் பதவியணியும் பதவியினருக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவி உயர்வுகள் பின்வருமாறு வழங்கப்படவுள்ளன.

(இ) 2014.09.30 ஆம் திகதிய TC/D/CWE/FA/AQ/211/2014 ஆம் இலக்கத்தின் கீழ் விடைகள் வழங்கப்பட்டுள்ளன.

1.2.5 <u>கணக்கிணக்கம் செய்யப்படாத நிருவாக கணக்குகள்</u>

(அ) இது நிதிக்கூற்றுக்களில் மட்டுமே கவனம் செலுத்துவதுடன் இது கொடுக்கல் வாங்கல்களிலுள்ள வேறுபாட்டில் கவனம் செலுத்துவதில்லை.

(ஆ) 2011 டிசம்பர் 31 இலுள்ளவாறான சரக்கிருப்பு குறிப்பு இல.11 இல் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வியாபார இருப்பு | 41,635,183.00 |
| கட்டிடப் பகுதி இருப்பு | 4,143,032.00 |
| பொதியிடல் பொருட்கள் | 454,513.00 |
| பிளாஸ்ரிக் கூடைகளின் இருப்பு | 61,830,650.00 |
| கூட்டுறவு கருத்திட்ட இருப்பு | 29,799,522.00 |
| | 96,227,717.00 |
| மொத்த இருப்பு | 137,862,900.00 |
| நிதிக்கூற்று – 2010 இலுள்ளவாறான இருப்பு | 110,518,113.00 |
| வியாபார இருப்பு | 31,220,951.00 |
| கூட்டுறவு கருத்திட்ட இருப்பு | 74,699,622.00 |
| கட்டிடப் பகுதி இருப்பு | 4,143,032.00 |

பொதியிடல் பொருட்களின் இருப்பு 454,513.00

79,297,167.00

2.2.6 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

(அ)

(1) களஞ்சிய இயந்திர கொள்வனவுக்கான பெறுமதி ரூபா 196,350/= ஆகும். இது குறிப்பு இல. 09 இல் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. அந்தப் பெறுமதியானது எமது காசுப் பாய்ச்சல் கூற்றில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

(2) களஞ்சிய உபகரணம் மற்றும் உறை குளிரூட்டிகளுடன் தொடர்புடைய அட்டவணைகளினை தயாரிப்பதிலுள்ள குறைபாடுகள் ரூபா 45,500/- ஆக திருத்தியமைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நாம் அவற்றிற்கான சீராக்கல்களினை மேற்கொண்டிருக்கவில்லை என்பதுடன் நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் உள்ளடக்கப்படவில்லை.

(3) 2011 இற்கு முன்னதாக அரச காணியில் நிருமாணிக்கப்பட்ட கட்டிடங்களிலொன்றான அநுராதபுர களஞ்சியத்திற்கு ரூபா. 8016 அதிகூடிய தேய்மானமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது சீராக்கலுக்கு மேலதிகமாக காட்டப்பட்டுள்ளது. ரூபா 8,016/- காசுப்பாய்ச்சலில் தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது

(ஆ) TC/D/CWE/FA/AQ/211/2014 இன் இல.30 இன் கீழ் இதற்கான விடைகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஈ) i. TC/D/CWE/FA/AQ/211/2014 இன் 03 (அ) இன் கீழ் விடைகள் அளிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா.292.5 மில்லியன் தொகையினைக் கொண்ட தொழிற்படு மூலதனமானது சுற்றுப் பாய்ச்சல்களினூடாக பல தடவைகளில் கடன்பட்டோர்கள், கடன் கொடுத்தோர்கள், நிதி மற்றும் நிதி என்பவற்றிற்கு மாற்றிடு செய்யப்பட்டுள்ளதுடன் பாரிய கொள்வனவு மற்றும் விற்பனை விலைகளாக மாற்றம் பெற்றுள்ளன. இது குறிப்பு இல. 25 இன் கீழ் "கூட்டுறவு ஆணையாளருக்குச் செலுத்ததக்க கடன்" இன் கீழ் செலுத்தத்தக்க தொகையாக காட்டப்பட்டுள்ளது.

ii. TC/D/CWE/FA/AQ/211/2014 03(ஆ) இன் கீழ் இதற்கான விடைகள் தரப்பட்டுள்ளன.

iii. TC/D/CWE/FA/AQ/211/2014 03(இ)இன் கீழ் இதற்கான விடைகள் தரப்பட்டுள்ளன.

iv. TC/D/CWE/FA/AQ/211/2014 03(ஈ) இன் கீழ் இதற்கான விடைகள் தரப்பட்டுள்ளன.

v. TC/D/CWE/FA/AQ/211/2014 03 (உ) இன் கீழ் இதற்கான விடைகள் தரப்பட்டுள்ளன.

2.2.7 <u>செலுத்தக்க மற்றும் பெறத்தக்க கணக்குகள்</u>

(அ) உடன்படுகின்றேன்.முதலீடுகளின் பெறுமதி மற்றும் கடன்பட்டோர்களின் பெறுமதி என்பன லங்கா சதொசவின் கடன்பட்டோர்களினுள் உள்ளடங்கியுள்ளது. மேற்குறித்த முதலீட்டுப் பெறுமதி மற்றும் கடன்பட்டோர்களின் பெறுமதி என்பன 2015 ஆம் ஆண்டின் கணக்குகளில் தனித்தனியாக பதிவு செய்யப்படுதல் வேண்டுமென குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) உரிய கடன்களினை அறவீடு செய்வதற்கான கட்டளைகளினைப் பிறப்பிக்கின்ற கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ)

(ஈ) உடன்படுகின்றேன்.

(உ) மீதியானது, 2015 ஆம் ஆண்டில் சதொசவினால் நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு செலுத்தத்தக்க மீதி மற்றும் சதொசவின் ஆவணங்கள் ஆகியவற்றின்படி, ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(ஊ) இது 2012 ஆம் ஆண்டின் கணக்குகளுக்கான சீராக்கல்களை மேற்கொள்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2.8 <u>கணக்காய்விற்கான போதிய ஆதாரமின்மை</u>

(அ) 2012 இலுள்ள கணக்குகளுக்கு ஏற்புடையதாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(ஆ)

2.2.9 <u>விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை</u>

(அ)

(ஆ)

(இ) இந்தக் கம்பனியின் உரித்துடமையானது முற்றுமுழுதாக கூமொதா இற்குச் சொந்தமாக இருப்பதால், கூமொதா இன் உத்தியோகத்தர்கள் குறித்த கம்பனியில் பதில் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். வெளியிலிருந்து குறித்த பதவிகளுக்கு ஆட்களை நியமித்தால் பெருமளவிலான பணத்தினை சமிபளத்திற்காகவும் ஏனைய கொடுப்பனவுகளுக்காகவும் செலுத்த வேண்டியிருக்கும் என்பதுடன் குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்து சிறியளவிலான சம்பளத்துடன் நிறைவான சேவை பெறப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டிற்கான வருடாந்த கணக்குகளின்படி, கம்பனிகளுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் ஒரு சில கம்பனிகள் மட்டும் தாபிக்கப்பட்டுள்ளன. எவ்வறாயினும் இத்தகைய கம்பனிகளின் வியாபாரமானது ஆரம்பிக்கப்படவில்லை. அதற்கிணங்க, கூமொதா இற்கு கொள்கையொன்றின் கீழ் கம்பனிகள் சட்டத்தின்படி கம்பனிகளினைத் தாபிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இத்தகைய கம்பனிகளினை தாபிப்பது ஒரு சட்டவிரோத நடவடிக்கை அல்ல. மேலும், மூலதனக் கம்பனியொன்றில் முதலீடு செய்யும் பொதுச் சொத்துக்குப் பதிலாக அதன் சொந்த மூலதனத்தினை பயன்படுத்துவது, கூமொதா போன்ற கம்பனிகளுக்கு சட்டரீதியானதாகும்.

மேலும், 2002 இல் ஆரம்பிக்கப்பட்ட கம்பனிகளின் கட்டமைப்புத் தேவைப்பாடுகளின்படி, இத்தகைய கம்பனிகள் மீளத் தாபிக்கப்பட்டுள்ளன. இத்தகைய கம்பனிகள், தனிநபர் கம்பனியொன்றினை தாபிக்கும் ஏற்பாடுகளின் கீழ் 2002 ஆம் ஆண்டின் 07 ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஏனைய பங்குதாரர்கள் இல்லாமல் கூமொதா இற்குச் முற்றுமுழுதாக சொந்தமானவையாக தாபிக்கப்பட்டுள்ளன.

(ஈ) கூமொதா ஆனது முற்றுமுழுதான உரித்துடமையினைக் கொண்டுள்ள கம்பனியாக இருப்பதால்' இத்தொகையானது அதனால் செலவிடப்பட்டுள்ளது. உரிய கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் ஏற்கனவே சதொசவினால் அறவீடு செய்யப்பட்டுள்ளன.

3 <u>நிதிசார் மீளாய்வு</u>

3.1 <u>நிதிசார் வெளியீடு</u>

3.2 <u>பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்று</u>

(அ)

(ஆ)

(இ)

(ஈ)

(4) <u>தொழிற்பாடுகளின் தொகுப்பு</u>

4.1 <u>பௌதீகசார் நிதி முன்னேற்றம்</u>

(அ) எதிர்காலத்தில் சரி செய்யுமாறு குறிப்பிட்டுள்ளேன்.

(ஆ) எதிர்காலத்தில் சரி செய்யுமாறு குறிப்பிட்டுள்ளேன்.

(இ) எதிர்காலத்தில் சரி செய்யுமாறு குறிப்பிட்டுள்ளேன்.

4.2 <u>வினைத்திறனற்ற முகாமைத்துவம்</u>

(அ)

(ஆ)

(இ) கூமொதா இன் கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் லங்கா சதொசவின் தொழிற்பாடுகளினை ஆரம்பிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய கட்டிடங்கள், கூமெதா இன் பங்களிப்புடன் ஓர் அரச கம்பனியாக தாபிக்கப்பட்டிருந்த லங்கா சதொசவிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்னர் வாடகையானது, உரிய பிரதேசங்களிலுள்ள வாடகை தொடர்பான சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்டது. பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகளினைப் பெற்றுக் கொள்வதற்கு செலவிடும் நேரம் மற்றும் செலவுகளுக்கான கொடுப்பனவுகளினை மேற்கொள்வதிலுள்ள நிதி நெருக்கடிகள் என்பன கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

(ஈ) (உ) லங்கா சதொசவிற்கு கூமொதா இனால் முதலீடு செய்யப்பட்ட ரூபா. 121,708,710.23 தொகைக்கான பங்குகளின் உரித்துடமையினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அமைச்சுச் செயலாளரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டது. நாம் இது தொடர்பில் உரிய தகவல்களையும் அறிக்கைகளினையும் சமர்ப்பித்துள்ளோம். பங்குகளின் முதல் தொகுதியானது வழங்கப்படுள்ளது என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றேன்.

(ஊ) 2012 ஜனவரியில் உரிய ஊழியர் சேமலாப நிதியினைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(ஆ) இங்கிரின் பிறின்ரிங் அன்ட் கிராபிக்ஸ் நிறுவகமானது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் இலாபம் எதனையும் வெளிப்படுத்தவில்லை. இங்கிரின் நிறுவகமானது அவர்கள் வழங்கிய பங்குகளுக்கான பணத்தினைச் (இணைப்பு 01) செலுத்தவில்லையென எமக்கு அறிவித்துள்ளதுடன் கூட்டுத்தாபனமானது நிறுவகத்தின் காணி மற்றும் கட்டிடம் என்பவற்றினை பெறுமதி மதிப்பீடு செய்து அவற்றிற்குப் பதிலாக கையளித்துள்ள போதிலும், முதலீட்டுக்குரிய பங்குகளினைக் கொள்வனவு செய்யுமாறு நாம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இது தொடர்பில், 2011 ஆம் ஆண்டின் கணக்குகளின் குறிப்பு 10 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) பதவியினரின் நாளாந்த சிற்றுண்டிகளுக்குப் பயன்படுத்தப்பட்ட மொத்த தொகையான ரூபா 1,076,286 இதனுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

4.4. கொடுக்கல் வாங்கல்களினை மறுசீரமைத்தல்

2012 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் இது தொடர்பில் விரிவான அறிக்கையொன்றினைத் வெளிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.5 வெளிப்படையான மோசடிமிகுந்த கொடுக்கல் வாங்கல்கள்

2009 மற்றும் 2010 இல் மேற்கொள்ளப்பட்ட பேக்கரிப் பொருட்களின் விற்பனை மூலம் ரூபா.1,321,285 மோசடி இடம்பெற்றுள்ளதாக அரச கணக்காய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் அடிப்படையிலான ஒழுக்காற்று நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றதுடன் ஒழுக்காற்று நடவடிக்கைகள் நிறைவு பெற்றதன் பின்னர் புலனாய்வு உத்தியோகத்தர்களினால் அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2014.03.07 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட பொது தொழில்முயற்சிகள் குழுவில் இந்த விடயமானது ஆராயப்பட்டதுடன் ஒழுக்காற்று புலனாய்வு நடவடிக்கைகளின் பெறுபேறுகள் பொது தொழில் முயற்சிகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

4.6 நிச்சயமில்லாத பொறுப்புடைமை

2012 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் வெளிப்படுத்துமாறு நான் குறிப்பீடு செய்துள்ளேன்.

5. கணக்கீடும் நல்லாட்சியும்

5.1 நிதிக்கூற்றுக்களினைச் சமர்ப்பித்தல்

5.2 ஒருங்கிணைந்த திட்டம்

தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. தேவையான மீளாய்வுகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

5.3 செயல் திட்டம்

உரிய வருடாந்த ஏற்பாடுகளின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

5.4 வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு

6. முறைமைக் கட்டுப்பாடு

தங்கள் உண்மையுள்ள,

எம்.ரிஸ்வான் ஹமீம்
தலைவர்
கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம்